தென்மொழி

ஓங்கிப் பெருகுக உ. த. மு. க.!

உலகத் தமிழின முன்
னேற்றக் கழகம்
இலகத் தரைநெடுகல்
எங்கும் — அலகற்(று)
ஓங்கு கிளைபல்கி
ஒன்றுபல நூறாகித்
தேங்கு நலம்பெருகத்
தேர்ந்து!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 18
ஓலை : 6
உருபா 1-25

www.thamizham.net - Free E book No 7517

நமக்கு வந்த மடல்கள்.

0: 883: அன்புமிகு ஐயா, வணக்கம். 'தென்மொழி' மாநாட்டு மலர்-காட்டும் நிறைவினூடே இன்றியமையாத ஒரு சில கூறுதற்கு இசைவு தாருங்கள். அன்பர்கள், இயக்கத்திற்கும் பிற அன்பருக்கும் கருத்துரைக்க வருமுன், தம்மைத்தாம் முழுமையாக முன்னளிக்கக் கற்றுக் கொண்டே எதையும் சொல்லுதல் வேண்டும். — (காட்டாக, திரு. நா. இளமாறன் அவர்களைப் போன்று).

மற்றபடி, கட்டுவரைவின்றி, விரைவு கொள்ளும்படி கூறுவார், தம்நிலையில் 'இயலும்அளவு' என்று வரைந்து கொள்வதை மறந்திடலாகாது. அதேபோல், நலிவுகளைச் சாடுவார், முதலில், தாம் தம் அளவில் நலிவுகள் அற்றவராகவும், பொலிவு வேண்டும் என்பார் தாம் பொலிவு தருபவராகவும்; கொள்கை பல உடைமையைக் குறையென்பார், தாமே இயக்கத்தை ஒரு கொள்கைத் தனி வரைக்குட்படுத்தாமலும் இருக்கப் பழகுதலே அழகாகும்; அறமுமாகும். மருளின்றி இருள் தீரஎண்ணிச் செய்தலே, குடி செயலுக்கு ஆகும் குடிமைப் பண்பாகும். உ. த. மு. க.! வெல்க! வளர்க! பொதுமை புரையின்றிப் பொலிக!

அன்பன், — **தென்மொழி மறை. ஙித்தலின்பன்** -சென்னை- 15

0:884: பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம். தருமபுரியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் தாங்கள் பங்கு கொண்டு ஆற்றிய உரையைக் கேட்டேன். **"தென்மொழி"** இதழில் தங்களின் தனித்தமிழைச் சுவைத்து விளக்கம் பெற்ற நான், ஆன்ற தங்கள் தமிழுரையைக் கேட்டு மகிழ்ந்தேன். தெள்ளிய நீரோடைஎன அமைதியான தங்கள் உரையில் தமிழினத்தில் கொலுவீற்றிருக்கும் நச்சரவங்களைத் தோலுரித்துக்காட்டினீர்கள். எங்கள் உள்ளம் தணல்கிறது! வரலாற்றையே மறைக்கத் துணியும் எத்தர்களால் நற்றமிழர் வாழ்வு சிறக்குமா? சீரழியும் என்பதே உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ?

புலவர். கோ. தங்கவேலு அவர்கள் ஆக்கிய "தமிழ் நில வரலாறு" நூலை வைத்துக் கொண்டு தாங்கள் உரையாற்றிய தங்கள் துணிவைக் கண்டபோது, தந்தை பெரியாரே உரையாற்றுகிறாரோ என்ற எண்ணமே என்னில் மேலிட்டது. கொள்கைத் தெளிவும், துணிவும் கொண்ட நீங்களும், திராவிடர் கழகப் பொதுச் செயலர் திரு. கி. வீரமணி அவர்களும் இணைந்திருக்குங்கால் தமிழினம் மீட்சி பெறும் காலம் வெகுதொலைவிலில்லை. வணக்கம். அன்பன்,

— **இரா. சம்பத்து**, தருமபுரி- 2

0:885 ... தென்மொழி இதழில் மற்றையோரின் வெற்று மடல்களைத் தவிர்த்து, தங்களின் நிலைத்த புகழ் நிறுவும் இலக்கிய ஆக்கங்களை வெளியிடுமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன். தங்கள் புலமை பெரிது. கட்சி ஆரவாரம் தவிர்த்துத் தமிழுக்கு ஆக்கம் தேட ஒல்லும் வகை செயற்பட வேண்டுகிறேன்.

— **க. இராசகோபால்**, ஆசிரியர், கோயமுத்தூர்- 26.

— (தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7517



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 18] தி. பி. ௨௦௧௩ சுறவம் (சன-பெப்'82) [ஓலை : 6

ஒன்றிணைந்தால் அல்லது தமிழினத்திற்கு உய்வில்லை.

இன்றைய தமிழினம் பல்வேறு வகைகளால் சிதறுண்டு கிடப்பது எல்லாரும் உணர்ந்ததே. ஏற்கனவே உள்ள சாதி மதங்களாலும், அரசியல் கட்சிகளாலும், குமுகாயக் கொள்கைகளாலும், பொருளியல் ஏற்றத் தாழ்வுகளாலும் தமிழர்கள் ஒற்றுமையின்றிப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கிடக்கின்றனர். அவர்களை ஒன்றிணைக்கும் பெரியதோர் இயற்கை ஆற்றலாகவுள்ள மொழி நிலையில் கூட ஓர் ஒருங்கிணைந்த போக்கு தமிழ் மக்களாகிய நம்மிடத்தில் இல்லை. பழைமையும், பெருமையும் நிறைந்ததாகிய நம் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் நமக்குள் பல வகையான கருத்து வேறுபாடுகள், கொள்கைப் போக்குகள் உள்ளன

www.thamizham.net - Free E book No 7517

இவ்வேறுபாடுகள் அனைத்தும் சேர்ந்து, மொழியை வளர்க்கின்ற — மொழிக்கு ஆக்கஞ் சேர்க்கின்ற ஓர் ஓங்கிய உணர்வாற்றலாக உருவெடுத்தாலும் நல்லது. ஆனால், அவ்வாறின்றி அக்கொள்கைகள் யாவும் ஒன்றுக் கொன்று முரண்பட்டதாயும், ஒன்றையொன்று எதிர்த்து அழிப்பதாயும், ஒன்றுக்கு ஒன்றால் தாழ்ச்சி ஏற்படுத்திக் கொள்வதாயுமே இருக்கின்றன. இந் நிலைகளால் நம் இனிய தமிழ் மொழி நலிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டுமே கீழ்மையுறுவதை நம்மில் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. தமிழறிஞர்களும், அரசியல் ஊதியக்காரர்களும் தமிழ் மொழியைத் தங்கள் தங்கள் வாழ்வுக்கு ஒரு துணைக்கருவியாகவே கொண்டு இன அழிப்பு முயற்சிகளுக்கே துணைபோகின்றனர். இதனால் மொழிக்கும் அதன் வழி இனத்திற்கும் நலன்கள் ஏற்படுவதற்கு மாறாகத் தீங்குகளே ஏற்பட்டு வருகின்றன.

மாறுபட்ட, முரண்பாடுற்ற இலக்கியப் போக்குகள் மொழி வழி ஏற்படுகின்ற பண்பாட்டு நலன்களையும் கலை நலன்களையும் சிதைத்தழிப்பதுடன், உலக அரங்கில் நம் இலக்கிய வளர்ச்சிக்கும் பெருங் கேடாகவே ஆகின்றன. வேண்டுமென்றே அக்கறையற்ற, மொழி நலம் காவாத இலக்கியக் கொள்கையாளர்கள் சிலர். மேனாட்டுப் பாணிகள் என்ற வகையில், நம்முடைய உயர்ந்த பண்பட்ட இலக்கியப் போக்குகளை இளைஞர்களிடையே திசைமாற்றம் செய்து வருவது மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. இவற்றைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளுக்கு அரசினரின் மாறுபட்ட, அல்லது வேறுபட்ட கொள்கைகளால், ஆதரவு கிடைப்பதில்லை. 'டாடி டாடி' 'பேட்டா பேட்டா' என்று திரைப்படப் பாட்டெழுதும் மொழி நலம் பேணாத மூங்கைகளையே, பாவேந்தர் பரம்பரைப் பாவலர்களாகத் தேர்ந்தெடுத்துப் பத்தாயிரம் உருபாப் பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கின்றனர். இந்த நிலைகள் மிகவும் இரங்கத் தக்கவும், வருந்தத் தக்கவுமாய் இருக்கின்றன. இவற்றுக்காகக் கவலைப்படும் ஓரிருவரைக் கூட தமிழ் வளர்ச்சித் துறைகளில் காண முடிவதில்லை.

தமிழ் வளர்க்கின்ற தமிழறிஞர்களும், தமிழாசிரியர்களும் புறக்கணிக்கப் படுகின்றனர். தமிழர் நலம் பேணுகின்ற கட்சிகளும் தலைவர்களும் பல்வேறு வகையில் அடக்கி ஒடுக்கப் படுகின்றனர். உண்மைக்கும் நேர்மைக்கும் ஒரு துளியும் மதிப்பில்லை. ஒழுக்கம் தேவையற்ற நடைமுறையாகவும், கொள்கையுறுதி வேண்டாத ஓர் உணர்வாகவும் கருதப்படுகின்றன. குரங்கு கையின் பூமாலையாக நாடு சிதைக்கப் படுகிறது. நலிந்தவர்கள், மெலிந்தவர்கள், வலிந்த வஞ்சகக் கயவர்களால் துன்புற்று வாடுகின்றனர். எந்த ஒரு கொள்கைக்கும் இப் பெரும்பான்மை மக்களிடம் பிடிப்பு இருப்பதில்லை.

இவ்வாறு அறிவுக் கூறுகள் அனைத்திலுமே தமிழினம் சிதைக்கப் பட்டுக் கீழ்மையுறுகின்றது. அரசியல் என்னும் பெயரால் தமிழினத்தைக் கூறு போடும் முயற்சிகளே நடந்து வருகின்றன. ஒருவரையொருவர் அழிப்பதையே அரசியலாகக் கருதுகின்ற பேரச்சம் நாட்டைக் கவ்வியுள்ளது. இவ் வழிநிலைப் போக்குகளினின்றும்,

www.thamizham.net - Free E book No 7517

இழிநிலைப் போக்குகளினின்றும் நாட்டையும் இனத்தையும் மீட்டெடுக்க வல்ல ஓர் ஒட்டுமொத்தமான முயற்சிகளுக்கு வரும் ஆதரவு குறைவாகவே இருக்கிறது. பொருளுதவிகளும் போதுமானவாக இல்லை. இந்த நிலைகளெல்லாம் மிக அண்மைக் காலத்திலேயே சரிப்படுத்தப் பெற்றுவிடும் என்னும் நம்பிக்கை நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது. மொழி, இன, நாட்டு நல முயற்சிகளில் ஈடுபட வேண்டிய பொது நலத் தொண்டர்கள், அறிஞர்கள் யாவரும் பட்டம் பதவிகளுக்காகவே பேய்களாய் அலைந்து திரிகின்றனர்; அரசியல்காரர்களை நத்துகின்றனர். பதவிகள், அதிகாரங்களில் குறுக்கு வழிகளைக் கையாள்கின்றனர். வரும் எதிர்ப்புகளுக்காக அஞ்சித் துணிவிழக்கின்றனர். இத்தகையவர்கள் மக்கள் நலம் கருதுபவர்களாக இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தலைவர்களாக இருக்கவே விரும்புகின்றனர். தந் நலமே இவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. இவர்களிடம் ஒழுக்கம் இருப்பதில்லை; உண்மை இருப்பதில்லை; நேர்மை இவர்களிடம் அறவே இல்லை.

இந்த நிலைகளையெல்லாம், சீரிழிவுகளையெல்லாம் போக்குவதற்குத் தமிழிளைஞர்கள் ஒவ்வொருவரும் உறுதியெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். பொதுத் தொண்டுக்குத் துணிந்து முன் வருதல் வேண்டும். கொள்கை வேறுபாடுகளை மன வேறுபாடுகளாக வளர்த்துக் கொள்ளக் கூடாது. நல்ல விளைவுகளுக்கான வழி முறைகளைக் கலந்து பேசி, ஒரு துணையை வழிகாட்டும் தலைமையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அத் தலைமை காட்டும் வழியில் ஓர் உறுதிப்பாட்டுடன் பாடாற்றுதல் வேண்டும். முதலில் தொண்டுள்ளத்தவர்கள் ஒன்று படுதல் வேண்டும்; அடுத்து, அறிஞர்களுக்கிடையில், ஒருங்கிணைப்பு ஏற்படுதல் வேண்டும்; அதன் பின் தலைவர்கள், வழி காட்டுநர்கள் ஒற்றுமைப் படுதல் வேண்டும். தமிழினத்தை ஒரே வழிப் பாதையில் கொண்டு செலுத்தவல்ல, அரசியல் பூசலற்ற ஓரின ஆக்கக் கொள்கைக்கே அனைவரும் ஒட்டு மொத்தமாகப் போராடுதல் வேண்டும். ஒன்றிணைந்தால் அல்லது தமிழினத்திற்கு உய்தியில்லை என்பதை உறுதியாக எண்ணுதல் வேண்டும். சிறு சிறு கொள்கைப் பூசல்களுக்காக நாம் போரிட்டுக் கொண்டு அழிந்து போதல் கூடாது. கொள்கை வேறுபாடுகளை மனவேறுபாடுகளாக நாம் வளர்த்துக் கொள்ளுதல் அறவே தவிர்க்கப் படல் வேண்டும். நம்மில் யார் தலைவராய் இருப்பது என்று எண்ணிப் பார்ப்பதைவிட, நம்மில் யார் தொண்டராய் இருப்பது என்று எண்ணிப் பார்க்கும் மனநிலை நம் அனைவர்க்கும் வாய்த்தல் வேண்டும். தமிழ் இளைஞர்களும் இளைஞைகளும் தங்களை இதற்காகவே ஈகம் செய்து கொள்ள வேண்டும்.

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடையது இல். (1021)

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். (1026)

— பெருஞ்சித்திரனார்.

www.thamizham.net - Free E book No 7517

உ. த. மு. க. தொடக்க மாநாடு.

(இரண்டாம்நாள் நிகழ்ச்சிச் சுருக்கம்)

முதல்நாள் (7-11-81) நிகழ்ச்சி முடிந்தவுடன், வெளியூரினின்று குடும்பம், குழந்தைகளுடன் வந்திருந்த அன்பர்கள் பலர் மாநாட்டு அரங்கத்திலேயே இரவு தங்கிக் கொண்டனர் பலர் அண்டை அயலிலுள்ள தங்கு விடுதிகளில் தங்கிக் கொண்டனர். நமக்குப் போதிய பொருளியல் ஏந்துகளின்மையாலும், நாங்கள் தேடிய ஓரிரண்டு தங்குமனைகளிலும் திருமணக் கூடங்களிலும் இடமின்மையாலும். வெளியூர் அன்பர்கள் தங்குவதற்குரிய சரியான முறையில் விடுதிகளை ஏற்பாடு செய்ய வியலாமற் போயிற்று. ஆனால், பெரியார் திடலை மேலாண்மை செய்யும் அன்பர்கள் நமக்கு மிகவும் உதவியாக விருந்தமையால், இரவில் அங்குத் தங்கியவர்களுக்கு ஓரளவு தண்ணீர், இடம், கழிவகம் முதலியவற்றிற்கு ஏந்தாக விருந்தது. அதற்காகக் கழகத் தோழர்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றோம்.

மறுநாள் (8-11-81) நிகழ்ச்சிகள் மிக விரைவில் தொடங்க விருந்தன. ஆனால் அன்று காலை நடக்க விருந்த தமிழினக்காப்பு மாநாட்டுக்குத் தலைமையேற்க விருந்த திரு. அமிர்தலிங்கம் இணையர், காலையில் தி. க. பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்களின் இல்லத்தில் சிற்றுண்டிக்குச் சென்றிருந்ததால், அங்கிருந்து திரும்புவதற்குச் சிறிது நேரமானதால், நிகழ்ச்சிகள் 10-15 அளவில் தொடங்கின. மேடையில் காலை நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விருந்த தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் அனைவருடனும், பிற்பகல் நடைபெற விருந்த உ. த. மு. க. தொடக்க மாநாட்டில் பங்கு கொள்ளவிருந்த பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், வழக்கறிஞர் கசுத்தூரி ஆகிய தலைவர்களும் சொற்பொழிவாளர்கள் சிலரும் வந்து அமர்ந்திருந்தனர். தொடக்கத்தில் தேன்மொழியருளியும், செந்தாழையும் முறையே இறைவாழ்த்தும், தமிழ் வாழ்த்தும் பாடிய பின்னர் தென்மொழி ப. துரையரசன் (படம்-1) தலைவரமர்த்தத்தை முன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து புலவர். நெடுமிடல் (படம்-2) பாவலர் குமர. நடவரச ஈவப்பனார் (படம்-3), புலவர். எழில்வாணன், இலக. இ. (படம்-4) மூவரும் வழிமொழிந்து உரையாற்றினர். அவ்வுரைகளைத் தொடர்ந்து, தென்மொழி

படம்-1.

(படம்-2)

www.thamizham.net - Free E book No 7517

மறை நித்தலின்பனார் (படம்-5) தலைவர், நாவலர் திரு. அ. அமிர்தலிங்கத்தை வரவேற்று உரையாற்றினார். அவர் உரையாற்றுகையில், தொடக்கத்தில் கீழ்வருமாறு தொடங்கும் பாடல் ஒன்றைப் பெருங்குரலெடுத்துப் பாடினார்.

படம்-3

இயங்கத் தொடங்கினோம்! — நாங்களும்
இயங்கத் தொடங்கினோம்!
உலகில் எங்கும் உரிமை கேட்டுத் தமிழராய்
இயங்கத் தொடங்கினோம்!
பூசலின்றி உரிமை பேணி வாழ்ந்த இனம்
பாசமுடன் நேசம் வைத்த [நாங்கள்!
உலக இனம் நாங்கள்!!
தேசமின்றி வாழ்வுமின்றி உரிமையற்றுப் போனோம்!
தூசெனவே பகைவர் முன்னால்
விழுந்து மாயலானோம்! (இயங்க)
கூசி மானமற்றுக் குறுகவே, பெண்டிரையும் தீண்டுவார்! ஏசிவந்து சூறையாடித் தலையரிந்து வீசுவார்! வீசும் தென்றல் இலங்கை நாட்டில், எமக்கு நேரும் ஊறுகள்! பேசி நின்று தீர்வுகாணும் வகைப்படுமோ கூறுங்கள்! (இயங்க)

படம்-4.

ஆரியங்கள் பலவும் எம்மேல் அன்று தொட்டு வந்தே, பூரியத்தால் வஞ்சம் வைத்து சூழ்ந்தடிக்கும் பாங்கை தேறி வந்து பார்ப்பான் வடவன் சிங்களத்தான் என்றே,ஏறிவரும் பகைவர் கூட்டம் மாய்த்தொழிக்க வந்தோம். (இயங்க)

நல்ல உணர்வுடனும் எழுச்சியுடனும் இவ்வீறு நிறைந்த அடிகளை அவர் கூறும்பொழுது கூட்டம் உணர்வால் நிரம்பிக் கையொலி செய்தது. பாடல் முடிந்ததும் தமிழினத் தலைவர்க்கும், அனைத்து அறிஞர்க்கும், அன்பர்க்கும் தாய்மார்க்கும் வரவேற்புக் கூறி முடித்தார்.

படம்-5

திரு. நித்தலின்பனாரையடுத்து, சென்னை மாநிலக் கல்லூரி, தமிழியல் ஆராய்ச்சி நிலைய நெறியாளரும், தமிழ்த் துறைத் தலைவரும் ஆகிய பண்டாரகர் மெ. சுந்தரனார் (படம்-6) தலைவரவர்களைப் பாராட்டிக் கீழ் வருமாறு பேசினார்.

www.thamizham.net - Free E book No 7517

தமிழீழ விடுதலைக் கூட்டணியின் தலைவர், நாவலர், பெரியவர் அமிர்தலிங்கம் அவர்களே! இந்த மாநாட்டை வலிவோடும் பொலிவோடும் நடத்திக்கொண்டிருக்கின்ற பாவலரேறு திரு.பெருஞ்சித்திரனார் அவர்களே! இந்த நாட்டின் உயிர் நாடியாய் இருக்கின்ற தந்தை பெரியார் அவர்களின் வழித் தோன்றலாய் இருக்கின்ற திரு, கி. வீரமணி, அவர்களே! பாவோகி திரு. சுத்தானந்த பாரதியார் அவர்களே! பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களே! மற்றும் இம் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்ற அறிஞர் பெருமக்களே! இந்த மாநாட்டில் ஒருபுறம் வந்து நிறைந்திருக்கின்ற தாய்மார்களுக்கு ஊக்கமும் ஊற்றமும் கொடுக்கின்ற வகையில் வந்திருக்கின்ற செந்தமிழ்ச்செல்வி திருவாட்டி. மங்கையர்க்கரசி அவர்களே! இந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாகிய தமிழினக் காப்பு மாநாடு மிகவும் வலிவோடும் பொலிவோடும் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டி வளர்த்த கொள்கைச் சிந்தனையோடும் நடந்து கொண்டிருக்கிறது. வரவேற்புரையாற்றிய திருவாளர் கூறியது போல, திருவள்ளுவர் அரங்கத்தில் இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

படம்-6

தமிழகத்தில் ஐந்தரைக் கோடி தமிழர்களுடன், இலங்கையிலும் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும், மொரிசியசிலும், பிசித்தீவிலும், இலட்சத்தீவிலும் ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கு — தமிழினத்தைக் காக்க வேண்டுமானால், மொழியின் அடிப்படையிலும், இனத்தின் அடிப்படையிலும்,வரலாற்றுப் பின்னணியிலும்,இலக்கியப் பின்னணியிலும், தமிழினத்தைக் காக்க வேண்டுமென்று பாவலரேறு பெருஞ்சித்திரனாரவர்கள் ஒரு வரலாற்று மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள்.

இந்த மாநாடு, ஓர் இன மாநாடு,மொழி மாநாடே தவிர, அரசியல் மாநாடன்று என்பது இங்குக் கூடியிருக்கிற கூட்டத்தைப் பார்த்தாலே தெரியும். இன்னொரு வகையிலே 'விடுதலை' வீரமணியவர்களும்,சுத்தானந்தபாரதியார் அவர்களும் அருகருகே அமர்ந்திருக்கிற காட்சியைப் பார்த்தாலே புலப்படும். ஒன்று சரியான கறுப்பு, இன்னொன்று சரியான சிவப்பு.கறுப்பும் சிவப்பும் இங்கே ஒன்றாகக்காட்சியளிக்கின்றது.இது எதிர்காலத்தாய்த்தமிழகத்தைக் கருப்பும்சிவப்பும் தாம் ஆளப் போகின்றன என்பதைக் காட்டுகிறது. (கைதட்டல்) அதற்கு இவர்கள் அமர்ந்திருக்கிற கண்கொள்ளாக் காட்சியே சான்றாகிறது. தமிழகத்தைப் பொறுத்த அளவில், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்,தந்தை பெரியாரவர்கள் ஊட்டி வளர்த்த இனவுணர்ச்சி-

www.thamizham.net - Free E book No 7517

யும், அண்ணா அவர்கள் ஊட்டி வளர்த்த மொழி உணர்ச்சியும், கலைஞர் அவர்கள் ஊட்டி வளர்த்த அரசியல் உணர்ச்சியும் — ஆக இந்த மூன்றும் சேர்ந்துதான் தமிழகத்தை வளர்க்க முடியும்.

வரலாற்றின் அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். இது தமிழக மறுமலர்ச்சியின் ஒரு திருப்பு முனையாகும். அந்தத் திருப்பு முனை சிறப்பாக அமைய வேண்டுமானால் தந்தை பெரியார் காட்டிய வழியில், அறிஞர் அண்ணா காட்டிய வழியில் இதுபோன்ற மாநாடுகள் அடிக்கடி நிகழ்த்தப் பெற வேண்டும்.'' என்பதாகக் குறிப்பிட்டு, அதைத் தொடர்ந்து, 'இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டிற்கு நம் பாவலரேறு எங்களையெல்லாம் அழைத்ததுபோல் வேறு சிலரையும் அழைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் அரசுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்கிறார்கள். அப்படி நடந்து கொள்வது இன்றைக்கும் நம்மிடையே எட்டப்பர்கள் இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது; அவர்கள் தமிழைக் காட்டிக் கொடுத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

'தமிழினம் ஆண்ட இனம். ஆட்சி நடத்திய இனம். வெறும்காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் இனம் அன்று. ஆட்சி வேறு; காட்சி வேறு. இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கியுள்ள நாவலர் அமிர்தலிங்கனார் அவர்கள் இலங்கையில் தமிழீழ விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் ஆவார்கள். அவர்கள் இந்த மாநாட்டுக்குப் பொருத்தமான தலைவரே யாகும். ஏனெனில் நாட்டிலே பல நாவலர்கள் இருக்கிறார்கள். நாவலர் நெடுஞ்செழியன் பதினாறுவது நாவலர். ஆனால், இந்த மாநாட்டு நாவலர் அமிர்தலிங்கனார் வெறும் நாவலர். ஏனெனில் அவர் இங்கேயும் அங்கேயும் நடமாடாத நாவலராக இருக்கின்ற காரணத்தினால்தான் வெறும் நாவலராக இருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கனார் அவர்கள் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் மன உறுதியையும் கொள்கை யுறுதியையும் பெற்றிருக்கிறார். எந்தச் சிறைக்கும் அஞ்சாதவர், அவர் ஒரு தன்மானத் தமிழராக இருக்கிறார். அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். அவரைப் போன்ற வழக்கறிஞர்கள் வழக்குகளில் ஈடுபட்டு ஏராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம் அமிர்தலிங்கனார் அவர்கள் தன்மானத் தமிழராக இருப்பதால் ஓர் இனப் போராட்டத்தையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கைகள் இன்று செடியாகி மரமாகிக் காய்த்துக் கனிந்து கொண்டிருக்கின்றன. அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் தமிழின முன்னேற்றத்திற்குப் பாயிரம் பாடினார்கள். அந்தப் பாயிரம் இன்று பனுவலாகியிருக்கிறது.

www.thamizham.net - Free E book No 7517

ஆகவே தமிழர்களுக்கு வழி காட்ட ஒப்பற்ற தலைவர்கள் இங்கே இந்த மாநாட்டிற்கு வந்திருக்கின்றார்கள். பாவலரேறு பெருஞ்சித் திரனாரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்னும் இனவெழுச்சி இயக்கத்தை — தமிழினக் காப்பு இயக்கத்தை—மக்கள் இயக்கமாகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இது தன் கொள்கைகளில் முழுவெற்றி பெறும் இந்த இயக்கத்தைக் காக்கும் பொறுப்பு,இங்குள்ள இன நலத் தலைவர்களுக்கு இருக்கிறது. அரசியலில் அமிர்தலிங்கனார் கொள்கையும்,இன நலத்தில் வீரமணி அவர்களின் கொள்கையும் மொழிநலத்தில் பெருஞ்சித்திரனார் அவர்களின் கொள்கையும்,தமிழினத்திற்கு வழிகாட்டித் தமிழின முன்னேற்றத்திற்குப் பயன்பட வேண்டும். அதற்கு இந்த மாநாடு உதவ வேண்டும்' என்பதாக பா். மெ. சுந்தரம் கூறி முடித்தார்கள்.

படம்-7

அவரையடுத்து,சோமனூர் வழக்குரைஞர் திரு. ப. **பத்மநாபன்** க. மு; ச. இ. (படம்-7) அவர்கள் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு வாழ்த்துரை வழங்கினார்கள். அவர் பேசுகையில், 'இந்த நாட்டில் எந்த ஓர் அரசியல் இயக்கத்திற்கும் பொறுப்பேற்று நடத்துவதென்பது, மிகவும் கடினமான செயலாகும். அதிலும் அவ்வியக்கம் இன நல விடுதலைக்குப் பாடுபடுவதென்றால் அதற்குள்ள தொல்லைகளை அப்பப்பா, அவ்வளவு எளிதில் சொல்லி விட முடியாது. இம் மாநாட்டின் தலைவர் தமிழீழ விடுதலைக்குத் தலைமை தாங்கி நடத்தி வருகிறார். அவர்களுக்கிருக்கும் தொல்லைகள், போராட்ட இடர்ப் பாடுகள் பலவாகும். அவற்றையெல்லாம் பொருட் படுத்தாமல், தம் கொள்கையை முன்னெடுத்துச் சென்று, திறமையுடன் தமிழீழ விடுதலையைப் பெற்றுத் தருவார்,அதன்வழி உலகத் தமிழ் இனத்திற்கு ஒருவகை அரசியல் காப்பை ஏற்படுத்தித் தருவார் என்று வேண்டிக் கொண்டு, அவர் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்' என முடித்தார்கள்.

அவர்களின் வாழ்த்துரைக்குப் பின்னர், மிகவும் எழுச்சியுடனும், வீறுடனும் நிறைந்த தொடக்க உரையை, 'விடுதலை' நாளிதழ் ஆசிரியர், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் உயர்திரு. **கி வீரமணி,** க. மு; ச. இ. அவர்கள் பேசினார்கள். (அவர்களுடைய பேச்சின் முதற்பகுதி, மாநாட்டு மலரிலும், அதன் பிற்பகுதி இவ் விதழிலும் தனியாக வெளியிடப் பெற்றிருக்கின்றது.) அவரைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் உலகத் தமிழின விடுதலைக் கழக முன்னோடியும் ஆகிய நாவலர் **அ. அமிர்தலிங்கம்** அவர்கள், மிகவும் உணர்வெழுச்சியுடனும், தமிழினக்

www.thamizham.net - Free E book No 7517

படம்-8

கொள்கை உரத்து'-னும் நீண்ட நெடிய தலைமை முன்னுரை யாற்றினார்கள். (அவர் களின் முழு உரையும் த னி யா க வெளி வரும்.) அவர்களையடுத்துத், 'தமிழினக் காப்பு — தேவையும் நடவடிக்கையும்' என்னும் தலைப்பில், **'இங்கும் அங்கும்'** எனும் இருமொழித் திங்களிதழ் ஆசிரி யரும், சிறந்த வரலாற்றியல், பொருளியல், மெய்யியல், ஆங்கில மொழியியல் பேராசிரி யரும், வட கோவையில் கல்வியகத்தில் இயங்கும் தனிப் பயிற்சிக் கல்லூரி முதல் வரும், மனு எரிப்புப் போராட்டத்தில் ஈடு பட்டுச் சிறைசென்ற மறவரும் ஆகிய பேரா. **கு. வெ. கி. ஆசான்**, க. மு. (ஆங்); க. மு ;(பொருள்); க. மு. (மெய் யியல்) அ வ ர் க ள் (படம்-8) சி ற ந் த கருத்துரையாற்றினார்கள். (உரைச் சுருக்கம் மலரில் வெளியிடப் பெற்றது.)

படம-9

ஆசானைத் தொடர்ந்து, 'த மி ழி ன முன்னேற்றத்தில் மொழியின் இன்றியமை யாமை' எ ன் னு ந் தலைப்பில், க ழ க இலக்கியச் செல்வரும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவரும் ஆகிய பேராசிரியர் பர். **சி. பாலசுப்பிரமணியம்**, க. மு (படம்-9) அவர்கள் அரிய உரை யாற்றினார்கள். அ வ ர் பேசுகையில், 'தமிழினக் காப்பு மாநாட்டின் தலைவர், ஈழத் தமிழர்களின் இணையிலாத் தலைவர் நாவலர் அமிர்தலிங்கனார் அவர்களே! தமிழாகவே வாழும் பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்களே! எங்களுடைய தொல் காப்பியராக விளங்குகின்ற பன்மொழிப் புலவர். அப்பாத் துரையார் அவர்களே! பெரும் பேராசிரியர் பண்டாரகர் சுந்தரனார் அவர்களே! தமிழர் தளபதியாக, தந்தை பெரியாரின் இணையற்ற வழித் தோன்ற லாக விளங்குகின்ற நண்பர் வீரமணி அவர்களே! உவமைப் பாவலர் சுரதா, அவர்களே! நண்பர்களே! மதிப்பிற்குரிய தாய்க்குலமே! உங்கள் அனைவர்க்கும் என்னுடைய பணிவான வணக்கம்!

தமிழ் இனம், தமிழ்மொழி,—இவற்றுக்குரிய பெருமை நிலைகளை சிறப்பு நிலைகளை உங்களுக்கு நான் உணர்த்த வரவில்லை. இவற்றை யெல்லாம் தமிழினம் அறிந்தே இருக்கின்றோம். தமிழினத்தைத் தவிர உலகில் மற்ற வரலாற்றினங்கள் என்றோ அ ழி ந் து விட்டன. ஆனாலும் இன்னும் உள்ளதாகிய தமிழினத்திலே தமிழ் மொழியினு டைய ஆளுமை (செல்வாக்கு), தமிழ் மொழியினுடைய இன்றியமை

www.thamizham.net - Free E book No 7517

யாமை உணரப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன, அதற்கு நாம் காண வேண்டிய வழி வகைகள் என்ன, என்பதைப் பற்றித்தான் இங்கே சிறிது சிந்திக்கச் செய்ய வந்திருக்கின்றேன்.

தமிழ் இனத்தைப் பற்றி, நாம் இதுகாறும் பேசிக் கொண்டிருப்பதெல்லாம், 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி' என்பதே! இதையேதான் நாம் எத்தனையோ ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகின்றோம். அதன் வழியாகத் தமிழ் இனத்தினுடைய பழமையையும் தமிழ் இனத்தினுடைய வீரத்தினையும், ஒருங்கே உணர்த்தி வருகிறோம். இதைக் கொஞ்சம் புதிய முறையிலே சொல்ல வேண்டும் என்று கருதினார், புரட்சிப் பாவலர் பாரதிதாசன் அவர்கள். அவர் சொன்னார், 'திங்களொடும், செழும் பருதி தன்னோடும், விண்ணோடும்,உடுக்களோடும்,மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் உடன் பிறந்தோம், நாங்கள்' என்று அவர் ஒரு புதிய பாதையிலே, இந்தத் தமிழினத்தினுடைய பழைமையினைப் பேசினார். உலகிலே திங்கள் எவ்வளவு பழமையானதோ, கருமுகில் எவ்வளவு பழைமையானதோ, நீலக் கடல் எவ்வளவு பழைமையானதோ,அதேபோலக் கோல வான் எவ்வளவு பழைமையானதோ அந்த அளவுக்குப் பழைமையுடையது தமிழ். அந்தத் தமிழோடு பிறந்த தமிழினம் பழைமையானது என்று சொன்னார். இப்படிப் பழைமையுடைய இனம்; இப்படிப் பழைமையுடைய மொழி. இவற்றின் இன்றைய நிலை என்ன, என்று நாம் பார்க்க வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு காலத்தை நாம் பார்க்கின்ற பொழுது, உலகத்திலேயே நாகரிகத்தினுடைய உச்சாணிக் கிளையிலே இருந்த இனம், என்று வரலாறு பேசுகிற கிரேக்க இனமும்,உரோம இனமும் இந்தத் தமிழினத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றன. கிரேக்கக் கப்பல்கள் வாணிகத்தின் பொருட்டு இங்கு வருகின்ற பொழுதே தங்களுடைய மரக் கலங்களிலே தங்கத்தை ஏற்றிக் கொண்டு வந்து இங்கே இறக்குமதி செய்துவிட்டு, அதற்குப் பகரமாக மிளகுப் பொதிகளைச் சுமந்து சென்றதாக போற்றுகிறது அகநானூறு. 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி' — என்று அகநானூறு (பாடல் : 149) போற்றிப் பழந் தமிழகத்தை நினைவூட்டுகின்றது.

பத்துப் பாட்டில் ஒன்றாகிய முல்லைப் பாட்டு ஒரு செய்தியைத் தருகிறது. அரசன் பாடி வீட்டிலே அமர்ந்திருக்கின்றான். அவனை இரவிலே காவல் காப்பதற்காக யவனர்கள் தங்களுடைய உறையிலே வாள் ஏந்தி, அதைக் கையிலே எடுத்துக் கொண்டு, மன்னனுடைய உறக்கம் கெடாமல் அவனுடைய உயிருக்கு ஏதம் (ஆபத்து) வராமல் காவல் காக்கிறார்கள் என்று பேசுகிறது முல்லைப் பாட்டு (வரி 59-66) இப்படி உரோம இனம், கிரேக்க இனம், யவன இனம், உலகத்தினு

www.thamizham.net - Free E book No 7517

டைய நாகரிகத்தின் உச்சாணிக் கிளையில் இருந்த காலத்தில், தமிழினத்தோடு இத்தகைய உறவு கொண்டிருந்தது என்றெல்லாம் நாம் படித்து விட்டு, இன்றைக்கு, இருபதாம் நூற்றாண்டுக்கு, நடப்பியல் காலத்துக்கு நாம் வருகிற பொழுது, நம்மைச் சுற்றி நாம் என்ன காண்கிறோம்?' என்பதாக முன்னுரை கூறி, நாம் எவ்வாறு தமிழ்மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்துவதில்லை என்றும், அவ்வாறு தாய்மொழியில் அக்கறை காட்டாத ஓரினம் எவ்வாறு உலக முன்னேற்றத்தில் பின்தங்கிப் போகும் என்றும் மிகவும் ஆராய்ச்சி நிலையுடன் கூறி முடித்தார்கள்.

படம்-10

அவரையடுத்து, ஈரோடை வாசவி கல்லூரிப் பேராசிரியரும், பலமொழி நூல்களின் ஆசிரியரும், பன்மொழிப் புலவரும், அகர முதலித் திறனாளரும் ஆகிய பேரா. **மு. ச. சிவம்**, க. மு. (படம்-10) அவர்கள், அதே தலைப்பில் அரியதோர் ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். அவர்கள் பேசும் பொழுது, உலகில் உள்ள சில வேற்றுமொழி இனங்களை எடுத்துக் காட்டி, அவர்கள் தம் தம் மொழிகளை எவ்வாறு கண்ணுங் கருத்துமாகப் பேணி உலக வரங்கில் முன்னேறி நிற்கின்றனர்கள் என்பதையெல்லாம் விளக்கமாகக் கூறி, தமிழரும், மொழி பேணுதலில் அக்கறையும் ஆர்வமும் காட்ட வேண்டும் என்று கூறினார்கள்.

அவரையடுத்து, 'குமுகாயச் சீர்திருத்தமும் தமிழின மறுமலர்ச்சியும்' என்ற தலைப்பில், சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், பாவலரும் ஆகிய பர். **இரா. இளவரசு**, க. மு. (படம்-11) அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுகையில் தமிழர்கள் எவ்வாறு குமுகாய முன்னேற்றத்தில், பொருளியலில் மிகப் பின் தங்கியுள்ளனர் என்றும், அவர்கள் தங்கள் நிலைகளை உயர்த்திக் கொள்ள என்னென்ன முயற்சிகளைச் செய்தல் வேண்டும் என்பது பற்றி யெல்லாம் விரிவாகப் பேசி அரங்கத்தில் ஒரு கலகலப்பை உண்டாக்கினார்கள்.

படம்-11

அவரைத் தொடர்ந்து அதே தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் பர். **பொன் கோதண்டராமன்**, க. மு. (பொற்கோ) (படம்-12) பெரியார் சிந்தனைகளை முன் வைத்து, மத மூட நம்பிக்கைகளால் நம் இனம் எவ்வாறு பின்தங்கிக் கிடக்கின்றது என்றும், அறிவியல் வளர்ச்சி பெற்ற இக் காலத்தில்

www.thamizham.net - Free E book No 7517

நாம் எவ்வாறு பல்வேறு அறியாமைகளில் மூழ்கிக் கிடக்கின்றோம் என்றும் உணர்ச்சியும் வேகமும் நிறைந்த உரைகளால் எடுத்துக் காட்டினார்கள். அவரையடுத்து, பெரியார் பேருரையாளர் பேரா.ந **இராமநாதன்** க. மு. அவர்கள் (படம்-13) 'இன்றைய அரசியல் போக்கும் தமிழினக் காப்பும்' என்ற தலைப்பில், அவர்களுக்கேயுரிய நகைச்சுவை ததும்பும் உணர்வுரைகளால் இன்றுள்ள அரசியலாளரின் போலி நடவடிக்கைகளையும், புல்லிய போக்குகளையும் நன்கு மக்கள் சிந்திக்கும் வண்ணம் எடுத்து விளக்கி உணர்வு கொளுத்தினார்கள்.

படம்-12

படம்-13

அவர்களை யொட்டி; அதே தலைப்பில் பாவலர் **மூகவை. இராசமாணிக்கம்** (படம்-14) அவர்கள், நறுக்குத் தெறிக்கும் வீறு உரைகளால், இன்றுள்ள அரசியல் பூசல்களை எடுத்துக் கூறி, நம் தமிழ்க் குமுகாயம் அபபுரைசான்ற போக்கினால் எவ்வெவ்வாறு நலிவடைந்து வருகிறது என்றும், எதிரிகள் எவ்வகையில் வளர்க்கப் பெற்று வருகின்றார்கள் என்பதையும் நன்கு எடுத்துக் காட்டி உரையாற்றினார்கள்.

அடுத்துப்பேசிய, பொதுவுடைமையையும் தனித்தமிழையும் இணைத்து வளர்த்து வரும் பன்னூலாசிரியரும் பொதுவுடைமைச் சிந்தனையாளருமாகிய வெங்காலூர் **எசு. குணசீலன்** (குணா) (படம்-15) அவர்கள் 'தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை' என்னும் தலைப்பில் அரியதொரு கருத்துரையாற்றினார். அவர் கூறிய ஆழமான, தருக்கியல் கருத்துகளை மக்கள் உடனுக்குடன் செவி வாங்கிக் கொள்ள இடலாதவர்களாய் அவரை மிக வியப்புடன் பார்த்தவாறு, அங்காந்து கேட்டுக் கொண்டிருந்தனர். (அவர் உரை மாநாட்டு மலரிலிருந்து தொடர்ந்து வெளியிடப் பெறுகிறது.) அவரையடுத்து, 'கலை வளர்ச்சியும் மக்கள் மனவியலும்' என்னும் தலைப்பில் உவமைப் பாவலர் **சுரதா** அவர்கள் தமக்கேயுரிய உரை நடையில், தமிழினத்தின் கலை ஆரவாரப் போக்கைச் சாடியதுடன்

படம்-14

www.thamizham.net - Free E book No 7517

படம்-15

பாவலரேறு அவர்கள் தொடங்கிய உ. த. மு. க இயக்கத்தைப் பாராட்டிப் பேசினார். அவர் பேசுகையில், பாவலர் ஒருவர்க்குப் பாடல்கள் எழுத மட்டுந்தான் தெரியும் என்னும் அவல நிலையைத் தகர்த்தெறிந்து இவ்வளவு பெரிய மாநாட்டைக் கூட்டி இத்தகையதோர் இன நல இயக்கத்தைத் தோற்றுவித்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் வரலாற்றிலேயே ஒரு புதுமையைச் செய்து விட்டார் என்றும் அவர் இயற்கையிலேயே ஒரு கவர்ச்சியான தோற்றத்தைப் பெற்றிருப்பதுடன், அவருக்கிருக்கும் தாடியும் அவர் நம்பிக்கையானவர், உண்மையானவர் என்று கருதச் செய்கிறது என்றும் போற்றிக் கூறினார்.

படம்-16

அவரை யடுத்து, 'மூலிகை மணி' ஆசிரியரும், மறைந்த மூலிகை மாமன்னர் வேலூர் **கண்ணப்பர்** அவர்களின் மகனும், தந்தையைத் தொடர்ந்து அவரின் அரிய தமிழ் மருத்துவத் தொண்டைத் தொடர்ந்து செய்து வருபவரும் ஆகிய மருத்துவர் **க. வேங்கடேசன்** க. மு அவர்கள் (படம்-17) 'தமிழ் மருத்துவ அறிவியல்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்கள்.

அவர் உரைக்குப் பின், ஈரோடை வேலா அச்சக நிறுவனரும், 'குறளியம்' ஆசிரியரும் ஆகிய **வேலா. அரசமாணிக்கனார்** (படம்-18), 'உலக நாகரிகமும் தமிழியற் பண்பாடும்' என்னுந் தலைப்பில் அரியதோர் உரையாற்றினார்கள். அவர்கள் உரையாற்றுகையில் உலகிற்கே நாகரிகமும் பண்பாடும் கற்பித்த தமிழினம் இன்று எல்லா வகையிலும் அடிமையுற்று, பல்வேறு மதங்களாலும் சாதிகளாலும் அரசியல் கட்சிகளாலும் பிரிக்கப் பட்டுக் கீழ்மை யெய்திக் கிடக்கும் அவல நிலையைச் சுட்டிக் காட்டி,- தொடங்கப் பெறும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், இவற்றுக்கெல்லாம் ஒரு விடிவு காணும் நோக்கில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

படம்-17

அவரைத் தொடர்ந்து, 'அறிவியல் நோக்கில் மக்களியல் போக்கு'

www.thamizham.net - Free E book No 7517

என்னுந் தலைப்பில், பல்லடம் மேனிலைப் பள்ளி அறிவியலாசிரியரும், நெடுநாளைய உறைத்த தென்மொழி அன்பரும் அறிஞரும் ஆகிய தென்மொழி ந. முத்துக் குமரனார்,(படம்-19) தமிழரிடத்தில் உள்ள அறிவியல் குறைபாட்டை எடுத்துக் கூறி, வளர்ந்து வரும் அறிவியல் போக்குக்கு ஏற்ப, நம் தமிழினம் தன்னை ஈடேற்றிக் கொள்ளவில்லையானால், உலக முன்னேற்றத்தில் இது பின் தங்கி விடும் என்ற வகையில் ஆழமானதொரு கருத்துரையாற்றினார். அவரைத் தொடர்ந்து அதே தலைப்பில், கோபி, அரசினர் கலைக்கல்லூரிப் பேராசிரியரும், தமிழ்த்துறைத் தலைவரும், ஆகிய பேரா. கா. அரங்கசாமி, க. மு. (படம்-20) அவர்கள் மிக விரிவாகவும், விளக்கமாகவும் தமிழினத்தில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சித் தடைகளை எடுத்துக் கூறி அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

படம்-18

படம்-19

பேராசிரியர் அரங்கசாமி அவர்களின் உரைக்குப் பின்னர் பகலுணவுக்கென பகல் 2-30 மணியளவில் காலை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.

மாலை நிகழ்ச்சிகள் சரியாகப் பிற்பகல் 4-15 மணியளவில் தொடங்கின. மாலை நிகழ்ச்சியாக உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு, பாவாணர் அரங்கத்தில் தொடங்கியது. மேடையில் பன்மொழிப் புலவர் பேரா. கா. அப்பாத்துரையவர்களும், 'சிந்தனையாளன்,' என்னும் இதழாசிரியர் வே. ஆனைமுத்து க இ அவர்களும், தமிழ்ப் பேரவைச் செம்மல், ஆட்சி மொழிக் காவலர் கீ இராமலிங்கனார் க மு. அவர்களும், பாவோகி சுத்தானந்த பாரதியார் அவர்களும், கோவை வழக்கறிஞர் இரா. கத்தூரி அவர்களும், கோபி வழக்குரைஞர், திருக்குறள் ஆய்வறிஞர் கு ச. ஆனந்தன், வ்ணி. இ; ச. இ. அவர்களும், மறைமலையடிகளாரின் திருமகனாரும் திருமுறைச் செம்மலும் ஆகிய பேரா. மறை திருநாவுக்கரசு அவர்களும், பாவலர்கோ கோவை. இளஞ்சேரன் அவர்களும், தமிழீழ விடுதலைக்

படம்-20

www.thamizham.net - Free E book No 7517

கூட்டணியின் கொழும்புச் செயலாளரும், இலங்கை தமிழ் எழுத்தாளர் கழகத்தலைவரும் ஆகிய, சொற்செல்வர் ஈழவேந்தன் அவர்களும், சொற்பொழிவாற்ற வந்திருந்த பிற அறிஞர்களும் வீற்றிருந்தனர். தலைவர் அமிர்தலிங்கமும் அவர் துணைவி மங்கையர்க்கரசியும், மக்களோடு மக்களாய் மாநாட்டின் முதல் வரிசையில் வீற்றிருந்து பிற்பகல் நிகழ்ச்சிகளையும் அறிஞர்களின் உரைகளையும் மிகவும் கவனமாகக் கண்டும் கேட்டும் மகிழ்வுற்றுக் கொண்டிருந்தனர்.

படம் 21

தொடக்கத்தில் தமிழ் வாழ்த்துக்குப் பின், தென்மொழியன்பர் ச. உணர்வேந்தி அறி இ. அவர்கள் தலைவரை முன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து, சென்னை, 'மருமம்' இதழாசிரியர் அரு. கோபாலன் (படம்-21) அவர்கள் தமக்கேயுரிய எடுப்பான குரலில் தலைவரை வழிமொழிந்து பேசினார். அவரைத் தொடர்ந்து தென்மொழி ச. சின்னத்துரை அவர்களும் தலைவரை வழிமொழிந்தார். அதன் பின்னர் உ. த. மு. க. தொடக்க மாநாட்டுத் தலைவராகிய பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார் அவர்களையும் அறிஞர்களையும், அன்பர்களையும் வரவேற்று புலவர் உரையாசிரியர் இறைக்குருவனார் (படம்-22) அவர்கள் உரையாற்றினார்கள். அவர் உரையாற்றுகையில், உ. த. மு. க. தோற்றத்தின் தேவையை எடுத்துக் கூறியும், வகுத்துக் கொண்ட அதன் கொள்கைகளை ஒருவாறு முன் விளக்கம் செய்தும், அதன் தொடக்க மாநாட்டிற்குத் தலைமையேற்க வந்த தலைவரை வரவேற்றும் பாராட்டியும், உரையாற்ற வந்துள்ள அறிஞர்களை வரவேற்றும் தமிழ்க் குமுகாய மறுமலர்ச்சிக்கான தொடக்க மாநாட்டில் பங்கு கொள்ள வந்திருந்த மக்கள் வெள்ளத்தை மகிழ்வுடன் வரவேற்றும் பேசினார்.

படம்-22

அவரையடுத்துத் தலைவர் அவர்கள் தம் முன்னுரையைச் சுருக்கமாகக் கூறினார். அவர் உரையாற்றுகையில், மொழிஞாயிறு பாவாணர் இருந்த பொழுது தொடங்கிய, உலகத் தமிழ்க் கழகம் இப்பொழுது ஒரு செயலமைப்பாக இயங்காமையால்தான், இக்கால் அவர் மாணவராகிய பாவலரேறு அவர்களால் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்றொரு புதிய அமைப்பு தொடங்கப் பெறுகிறதென்று, குறிப்பிட்டார்கள். (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7517

சிறப்புச் செய்தி

சென்னையில், சொல்லாய்வறிஞர் தமிழூர் ப. அருளியின் தொடர் சொற்பொழிவுகள்.

சென்னை எழுமூர், மார்சல் சாலையிலுள்ள, அரசவயவர் **முத்தையா** அவர்களைத் தலைவராகக் கொண்ட **தமிழ், சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி** நிறுவனத்தின் சார்பில், அதன் இயக்குநர் பண்டாரகர். **அ. று. அழகப்பனார்.** அவர்கள், சொல்லாய்வறிஞர் **தமிழூர். ப. அருளி** அவர்களைக் கொண்டு, சொல்லாய்வுச் சொற்பொழிவுத் தொடர் ஒன்றைக் கடந்த 7-2-82 ஞாயிறு காலை 10 மணியளவில் அந் நிறுவன அரங்கில் தொடங்கி வைத்தார். ஒவ்வோர் ஆய்வு நிகழ்ச்சியும் இனி வரும் ஆங்கில மாதங்களில் ஒவ்வொரு மூன்றும் ஞாயிற்றுக் கிழமையிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன.

7-2-82 இல் நடந்த முதல் சொல்லாய்வுச் சொற்பொழிவிற்கு, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமை தாங்கினார். இவ் வாய்வுத் தொடர்சொற்பொழிவுக்கான அனைத்து முயற்சிகளையும் திரு. **ஆறு. அழகப்பனார்** திறம்படச் செய்திருந்தார். செய்தி பரவலாகத் தெரிய வேண்டி, சென்னையிலும், பிற சுற்றுப்புற நகரங்களிலும் உள்ள அறிஞர்களுக்கும். தமிழ் ஆர்வலர்களுக்கும், செய்தியாளர் களுக்கும் அழைப்புகளை நேரிடையாகவே அனுப்பி வைத்தார். நிறுவனச் சார்பில் செய்தித் தாளுக்கும் விளம்பரம் தரப்பெற்றது. ஆட்சி மொழிக் காவலர் **கீ இராமலிங்கனார், பாவேலாகி. சுத்தானந்த பாரதியார் பேரா. கி. பாலசுப்பிரமணியனார்,** போலும் பேரறிஞர்கள் பலரும் இத் தொடர் சொற்பொழிவை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்று வாழ்த்துரை விடுத்திருந்தனர்.

முதல் சொற்பொழிவுக்கு முதுதமிழ்ப் பேரறிஞர் அ. **கி. பரந்தாமனார்** உட்பட அறிஞர்கள், தமிழ் நலம் பேணும் புரவலர்கள், ஆர்வலர்கள், அன்பர்கள் பலரும், மகளிரும் வந்திருந்து ஆய்வுரையை இறுதிவரை இருந்து கேட்டனர்.

ஒவ்வோர் ஆய்வுரையிலும் பப்பத்துத் தமிழ்ச் சொற்கள் மேனி நூறு தமிழ்ச் சொற்கள் ஒரு தொடராக ஆயப் பெறும். சொல், சொல்மூலம், வேர், அதன் வளர்ச்சி நிலைகள், வரலாற்று விளக்கங்கள், அச்சொல் பல்வேறு திரவிட ஆரிய, இந்தோ ஆரிய, சேமிய மொழிகளில் போய்த் திரிந்தும், சிதைந்தும், வளர்ந்தும் வழங்கப் பெறும் வடிவங்கள் பொருள்கள் என்னும் வகையில் ஒவ்வொரு சொல்லும் ஆய்வு பெறும். சொல்லாய்வறிஞர் **தமிழூர் ப. அருளி** அவர்கள் தம் முதல் சொற்பொழிவில், ஆழி, தாள், கன்னம், பதலை, பை என்னும் ஐந்து சொற்களையும் தம் இரண்டு மணி நேர ஆய்வுரையில் மிகவும் சிறப்புற ஆராய்ந்து விளக்கினார் தலைவரும் அறிஞர்களும் மிகவும் வியப்பும் மகிழ்வும் அடைந்து அவரின் நுண்மாண் நுழை புலத்தைப் போற்றினர்; புகழ்ந்தனர். அவரின் அடுத்த சொற்பொழிவு வரும் 21-3-82 இல், முன்னர் நடந்த அதே இடத்தில் நடைபெறும்.

www.thamizham.net - Free E book No 7517

செய்திகள்

1) பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு-தருமபுரி.

கடந்த 13-12-81 ஞாயிறு மாலை 6 மணியளவில், தருமபுரியில் தி. க. சார்பாக, வெங்காலூர். வி டி. **இராசசேகர்** தலைமையில், பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு நடந்தது. என். எசு. சம்மந்தம் வரவேற்புரையாற்றினார். பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தொடக்கவுரையாற்றினார். திருவாளர்கள் **கீ. வீரமணி,** வேலா இராசமாணிக்கனார், கா. மா. குப்புசாமி, கோ. சாமிதுரை, எசு. துரைசாமி, குடந்தை ஏ. எம். சோசப், என். செல்வேந்திரன், என். எம். சீராமுலு, சி. எச். கோதண்டம், தேசாய் வேணுகோபால், அ. தீர்த்தகிரி, உசேனி பிரான் ஆகியோர் உரையாற்றினர். சோலையார் பேட்டை கே. கே. சின்னராசு கொடியேற்றினார். இறுதியில் பேரா. **தங்கவேலனார்** எழுதிய 'தமிழ் நில வரலாறு' என்னும் அரிய வரலாற்று நூலுக்கு நெருக்கடி நிலைக் காலத்தில் இட்ட தடையை நீக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

2) திருக்குறள் பேரவை மாநாடு — ஈரோடு.

பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாடு, சென்ற 16-1-82, 17-1-82 காரி, ஞாயிறு, ஈரோடு என். எம். எசு. கலையரங்கத்தில் நடைபெற்றது. 16-1-82 காரி நடந்த தொடக்க விழாவிற்கு உயர்திரு **குன்றக்குடி அடிகளார்** தலைமை தாங்குவதாக இருந்தது. ஈரோட்டில் உள்ள அருள்நெறித் திருக்கூட்டத்தார் அடிகளார் வரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப் பெற்றது. எனவே அவர் கலந்து கொள்ளவில்லை. ஆகவே காலைக் கருத்தரங்கிற்குப் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமை தாங்கக் கேட்டுக் கொள்ளப் பெற்றார். பேரா. **கா. அரங்கசாமி.** க. மு. அவர்கள் வரவேற்புரையாற்றினார். கருத்தரங்க ஆய்வாளராக திருக்குறள் **வீ. செ. கந்தசாமி** அவர்கள் அமர்த்தப் பெற்றார். 'மதக்குழப்பங்களைத் தகர்க்க முப்பால் தரும் வழிகள்' என்னுந்தலைப்பில் பர். **வை. இரத்தினசபாபதி** அவர்களும் 'குமுகாயக் குழப்பங்களைக் களைய முப்பால் தரும் வழிகள்' என்னுந் தலைப்பில் பேரா. **கு.வெ.கி. ஆசான்** அவர்களும். 'பெண்டிரினத்தில் காணும் பேதைமைகளைத் தூர்க்க, முப்பால் தரும் வழிகள்' என்னுந் தலைப்பில் பர். **மீனாட்சி முருகரத்தினம்** அவர்களும், 'பொருளியல் குழப்பங்களைப் போக்க முப்பால் தரும் வழிகள்' என்னுந் தலைப்பில், சிந்தனைச் செம்மல் **கு. ச. ஆனந்தன்** அவர்களும் கருத்துரையாற்றினர். இறுதியில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** முடிவுரை யாற்றினார். அன்று பிற்பகல் நடந்த மாநாட்டிற்கு உயர்திரு. **சண்முக**

www.thamizham.net - Free E book No 7517

சுந்தரனார் தலைமையேற்றார். திரு. வேலா. இராசமாணிக்கம் வரவேற்புரையாற்றினார். மாநாட்டுத் தொடக்கப் பேருரையை திரு. கி. வீரமணி அவர்கள் நிகழ்த்தித் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார். பாவலரேறு சிறப்புரையாற்றினார். திரு.சி.மு. அ. அப்துல் காதிர்.வணி.இ. நன்றியுரையாற்ற முதல்நாள்மாநாடு நிறைவுற்றது.

3) பாவலரேறு பெருஞ்சித்திரனார்க்கு வரவேற்பு விழா — பொங்கல் விழா — வேலூர்.

கடந்த 17-1-82 வேலூர் (வ. ஆ) வணிக வைசிய திருமண மண்டபத்தில் உ. த. மு. க. அமைப்பாளர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கட்கு வரவேற்பு விழாவும், பொங்கல் விழாச் சிறப்புக் கருத்தரங்கமும் நடைபெற்றன. விழா ஏற்பாடு புலவர். **ம. நாராயணன்.** க. மு. அவர்களால் சிறப்பாகச் செய்யப் பெற்றிருந்தது. மாலை 6 மணியளவில் நடந்த நிகழ்ச்சிக்கு திரு. **வெ. சோலைநாதன்** தலைமை தாங்கினார். திரு. க. **திருநாவுக்கரசு,** வணி. இ. வரவேற்புரையாற்றினார். புலவர். **ம. நாராயணன்.** க. மு. தொடக்கவுரை செய்தார். திருவாளர்கள் **வி. எசு. இரேணுகோபால்,** **மா. சண்முக சுந்தரம்,** அறி. இ., **ச. இரா. சு. பொன்னுசாமி,** அறி. இ. **வே. மோ. சத்தியமூர்த்தி.** க. இ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. **வி. இரா. தங்கவேல்** அவர்கள் விழாவில் ஈடுபட்டவர்களுக்குப் பரிசளித்தார்கள். அதன் பின்னர் நடந்த சிறப்புக் கருத்தரங்கத்தில், 'தமிழர் வாழ்வு — நேற்று' என்ற தலைப்பில் பேரா. **சுதாகர்.** க. மு; மெய். மு. அவர்களும், —'இன்று' என்ற தலைப்பில் புலவர். திரு. **ம. நாராயணன்,** க. மு. அவர்களும், — 'நாளை' என்ற தலைப்பில், புலவர். திரு. **வே. அர. சைலவாசன்,** க. மு; கல். இ. அவர்களும் இலக்கிய, வரலாற்று அடிப்படையில் கருத்துரைகள் ஆற்றினர். இறுதியாகப் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** விழா நிறைவுப் பேருரையாக நெடிய, உணர்வு சான்ற ஆய்வுரையாற்றி மக்களை அறிவுணர்வு பெறச் செய்தார். அவரது உரை முடிவில் மக்களிடம் நல்ல எழுச்சி ஏற்பட்டதாகவும் முதியவர் ஒருவர் பாவலரேறு உரையைக் கேட்டுத் தம் உடலிலுள்ள பூணூலை அறுத்தெறிந்ததாகவும் விழா அமைப்பாளர் பாவலர் **நிறைவாணன்** தெரிவித்தார்.பாவலரேறு அவர்களின் வரவேற்பு விழா நிகழ்ச்சிப் படங்களும் உரைகளும் அங்குள்ள 'மாலைமுரசு', தினத்தந்தி', சென்னைத் 'தினமலர்' ஆகிய செய்தித் தாள்களில் வந்தது குறிப்பிடத் தக்கது.

4) சென்னைத் தொலைக்காட்சியில் பாவலரேறு :

கடந்த 21-1-82 இரவு 8-15 மணிக்கு, சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தாரால் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த 'வண்ணக் களஞ்சியம்' நிகழ்ச்சியில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள், **'கழகக் காலத்தில் திருவிழாக்கள்'** என்பது பற்றிச் சிறப்புரை

www.thamizham.net - Free E book No 7517

யாற்றினார்கள். நிகழ்ச்சியைக் கண்டு களித்த அன்பர்கள் பலரும் நேரிலும், மடல் வழியாகவும் ஆசிரியர்க்குப் பாராட்டும் மகிழ்வும் தெரிவித்தனர். நிகழ்ச்சி மிகவும் பயனுடையதாக விருந்தது.

5) திருக்குறள் விழா — நாமக்கல் :

கடந்த 23-1-82 இல் சேலம் மாவட்டம், நாமக்கல்லில், திருக்குறள் பேரவை சார்பாகச் சிலப்பதிகார விழாவும், 24-1-82-இல் திருக்குறள் விழாவும், அங்குள்ள குளக்கரையில் அமைந்திருந்த 'நாமக்கல் பாவலர் அரங்கில்' சிறப்புற நடைபெற்றன. இரண்டாம் நாள் திருக்குறள் கருத்தரங்கம் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமையில் சிறப்புற நடந்தது 'திருக்குறளில் அறிவியல்' என்னும் தலைப்பில், நாமக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் திரு. **பீர்முகைதீன்,** அறி. மு., ஆ. ப. அவர்களும், 'திருக்குறளில் பொருளியல்' என்னுந் தலைப்பில் பேரா. திரு. **வ. இராசு,** அறி. இ. (மதி)., ஆ. ப. (முதல்வர் அ. அ. அரசு கல்லூரி. நாமக்கல்) அவர்களும், திருக்குறளில் வாழ்வியல்' என்னுந் தலைப்பில், புலவர். **கா. அப்துல் கபார்.** க.மு., ஆ.ப. அவர்களும் 'திருக்குறளில் அரசியல்' என்னுந் தலைப்பில் திரு. **ந. மணிமொழியன்,** அறி. இ. அவர்களும், ஆய்வுரையாற்றினார்கள். இறுதியில் பாவலரேறு அவர்கள் சிறப்புரையாற்றி மக்களையும் மாணவர்களையும் நிறைவுறச் செய்தார்கள்.

6) அண்ணாமலையரசர் 100-ஆம் ஆண்டு விழா :

சென்னை, பெரியார் நூலக வாசகர் வட்டம், கடந்த 28-1-82 அன்று மாலை 6-30 மணியளவில், ஏற்பாடு செய்திருந்த அண்ணாமலையரசரின் 100-ஆவது ஆண்டு விழா, பெரியார் திடலில் இராதா மன்றத்தில் நடைபெற்றது. விழாவிற்குக் கலைமாமணி, நடிகமணி, திரு. **டி. வி. நாராயணசாமி** அவர்கள் (செயலர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்) தலைமை தாங்கினார். பேரா. **இலெ. ப. கரு. இராமநாதன்** (முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) அண்ணாமலையரசர் கல்விக்கும், இசைக்கும் செய்த அரிய தொண்டுகளை நினைவு கூர்ந்தார். இசைப் பேராசிரியர் திருப்பாம்புரம் **சோ. சண்முகசுந்தரம்** பொறியாளர் **ப. தண்டபாணி** ஆகியோர் அண்ணாமலை அரசர் தமிழ்க்கும் தமிழர்க்கும் ஆற்றிய அரும் பணிகளை எடுத்துக் கூறினர். தலைவர் அவர்களின் இசை, நாடகத் துறையில் பார்ப்பனர்களின் வல்லாண்மையைக் கடந்த கால நிகழ்ச்சிகளுடன் பொருத்திக் காட்டினார். அவர் கூறிய வரலாற்றுச் செய்திகளில், அண்ணாமலை அரசர் இசைக் கல்லூரியை நிறுவிய நிகழ்ச்சி அனைவராலும் நினைவு வைத்துக் கொள்ளத் தக்கது. ஒருகால், அண்ணாமலை அரசர் தில்லியில் நடைபெற்ற ஓர் இசையரங்கிற்குச் சென்றிருந்தார். அந்த இசையரங்கிற்கு இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒவ்வோர் இசைக் குழு வந்திருந்து, அந்தந்த

www.thamizham.net - Free E book No 7517

மாநிலத் தாய்மொழியில் இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தது. அந்த வரிசையில் ஆந்திர மாநிலத்திலிருந்து வந்திருந்த இசைக் குழு தெலுங்கில் இசை நிகழ்த்தியது. அடுத்தபடி, தமிழ் மாநிலத்திலிருந்து சென்றவர்களும் தெலுங்குப் பாடல்களையே பாடினர். அக்கால் அவையிலிருந்தவர்கள், "தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழில் பாடாமல், தெலுங்கிலேயே பாடுகிறார்களே. தமிழ்மொழியில் இசை இல்லையோ?" என்று பேசிக் கொண்டனர். இதை அங்கிருந்த ஆர். கே. சண்முகம் அவர்களும், அண்ணாமலை அரசரும் கேட்டு மிகவும் மனம் வருந்தி, தமிழிசை கொஞ்சங் கொஞ்சமாக அழிக்கப் பெறுவதை உணர்ந்து, அதன் விளைவாகத் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்தனர். அதன் பின்னர் அரசர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரியையும் தோற்றுவித்தார். ஆனால் அவர்கள் தோற்றுவித்த தமிழிசைக் கழகம், இக்கால் தமிழ்ப் பண்பாட்டின் பகைவர்களின் கைக்குப் போய்விடுமோ என்று அஞ்சுவதாக திரு. நாரயணசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

இறுதியில் பேசிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பழந்தமிழரிடம் இசைக்கலை எந்த வகையில் முழு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்கு ஓரிரண்டு இலக்கியச் சான்றுகளைக் கூறி, அத்தகைய கலை இடையில் பார்ப்பனரால் எவ்வாறு அழிக்கப்பட்டதென விளக்கி, இவற்றுக்கெல்லாம் தமிழர்கள் தம் தாய்மொழியைப் புறக்கணித்ததே அடிப்படைக் காரணியம் என்று எடுத்துரைத்து, இனி-யேனும் தமிழ்மொழியை முன்வைத்துத் தமிழினம் ஒன்றுபடவில்லையானால் எதிர்காலத்தில் தமிழினமும், தமிழ்க் கலைகளும், பண்பாடும், தமிழ்மொழியும் ஆரியத்தால் அழிக்கப்பட்டு விடும் என்று எச்சரித்து உரையாற்றினார்கள். தொடக்கத்தில் செயலாளர் வரவேற்புரையும், இறுதியில் கூ. வ. எழிலரசன் க. மு. நன்றியுரையும் கூறினர்.

(இடமின்மையால் வேறு பிற நிகழ்வுச் செய்திகள் வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்.)

'தென்மொழி' சென்னை-5.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7517

புதிய வெளியீடுகள்.

1) சிங்கள ஆமர்க்களம்.

ஆசிரியர் : சொல்லாய்வறிஞர். ப. அருளி, வணி. இ; ச. இ;
வெளியீடு : 'தனித்தமிழ்மனே', காளிகோயில் தெரு, தமிழூர் (திலாசுப்பேட்டை), புதுச்சேரி - 605 009.
விலை : உருபா ஐந்து, அஞ்சல் செலவு தனி.
குறுவிளக்கம் : தமிழீழப் போராட்டத்தின் முந்தைய, இற்றைய வரலாற்று விளக்கங்கள், அங்கு நடக்கும் ஆட்சிக் கொடுமைகள், தமிழின அழிப்பு முயற்சிகள் முதலியவற்றை விரிவாகப் புள்ளி விளத்தங்களுடன் தரும் சிறந்த பயனுள்ள நூல். இவ்வகையில் வந்த நூல்களுள் சிறந்தது.

௨) குழந்தைக்குத் தமிழ்ப்பெயர்கள் :

ஆசிரியர் : தஞ்சை பா. இறையரசன், க. மு.
கிடைக்குமிடம் : அன்னை நிலையம், அஞ்சல்துறைக் குடியிருப்பு, தஞ்சாவூர் - 613 006.
விலை : உருபா 1-25. அஞ்சல் செலவு : 0-25.
குறுவிளக்கம் : தூய தமிழுணர்வும் அறிவும் பரவி வரும் இந்நாளில், குழந்தைகளுக்குப் பெயரிடுவதில் நல்ல தமிழ்ப் பெயர்களை இட விரும்பும் பெற்றோர்க்குப் பயன் தரும் இனிய நூல். திருமணம் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் விழாக்களில் பரிசு தருவதற்குரிய நல்ல நூல். ஆண், பெண் குழந்தைகளுக்கேற்ற, ஏறத்தாழ 2500 தனித்தமிழ்ப் பெயர்கள் அடங்கிய நூல் இது.

௩) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் புரட்சி :

ஆசிரியர் : குடந்தை. **வீரா. இராசகோபாலன்**, கீ.க.தே.க.மு.
கிடைக்குமிடம் : சேது அம்மாள் பதிப்பகம், 57, பெருமாள் முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
விலை : உருபா, 5-00.
குறுவிளக்கம் : தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அறிஞர்கள் பலரும் இக்கால் வலியுறுத்துகின்றனர். கருத்தரங்குகள் பல நடைபெறுகின்றன. பலவகையான ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் வந்து கொண்டிருக்கின்றன. இந்த வகையில் எழுதப் பெற்ற ஆராய்ச்சி நூல் இது. தமிழ் எழுத்துகள் அனைத்தையும் 31 வரிவடிவங்களைக் கொண்டே எழுதி விடுவதற்கான விளக்கங்களை ஆசிரியர் இந்நூலில் ஆராய்கிறார். இத்துறையில் ஆய்பவர்களுக்கு இது மிகப் பயனுடைய நூல்.

www.thamizham.net - Free E book No 7517

4) நினைவுக் கலை :

ஆசிரியர் : நினைவுக்கலை ஏந்தல் பெ. இராமையா.

கிடைக்குமிடம் : இளங்கோ பதிப்பகம், கருணாநிதி நகர், கோவில் பட்டி, 627 701, நெல்லை மாவட்டம்.

விலை : உருபா. 7-50.

குறுவிளக்கம் : நினைவுக்கலை ஓர் அரிய கலை. இக்கலை இக்கால் அருகி வருகிறது. இக்கலையை எப்படிக் கற்பது, மனப்பயிற்சி செய்வது, அதற்கான உடற்பயிற்சி உணப்பயிற்சி முதலியவற்றுடன், தாம் அக் கலையைக் கற்ற வகை, நிகழ்த்தும் வகை இவற்றைத் தெளிவாக இந்நூலின்கண் விளக்குகிறார் இதன் ஆசிரியரும் பதின்திறலாரும் ஆகிய விழியில்புலவர். பெ. இராமையா அவர்கள். அனைவரும் படித்தின்புற வேண்டிய நூல் இது.

உ. த். மு. க. கொடி அமைப்பு

கொடியின் நிறம் : நம் உ. த. மு. க. வின் கொடி நல்ல மாலைச் சிவப்பு (Sunset - red) அல்லது மிக்கச் சிவப்பு (Crimson red) என்னும் நிறத்தில் நடுவில் வெள்ளை வட்டத்துடன் அமைந்தது.

கொடியின் அளவு : நீளம் 3 பங்கு; அகலம் இரண்டு பங்கு; உள்ளே உள்ள வெள்ளை வட்டத்தின் விட்டம் ஒரு பங்கு. அஃதாவது நீளம் : அகலம் : வெள்ளை வட்ட விட்டம் = 3 : 2 : 1. எடுத்துக் காட்டாக, கொடி 3 அடி நீளமானால் அகலம் 2 அடி; உள்ளே உள்ள வெள்ளை வட்டத்தின் விட்டம் 1 அடி ஆகும்.

தைப்பு முறை : சிவப்புத் துணியின் நடுவில் வெள்ளை நிற வட்டத் துணியை வைத்துத் தைப்பதைவிட, அழுத்த வெள்ளை வண்ணத்தைச் சிவப்புத் துணியின் நடுவில் பூசி விடுவது எளிது.

'விரிவிசும்பை' - பாட்டு.

உ. த. மு. க. தொடக்க மாநாட்டில் இசைத்த இறைவணக்கப் பாடலான, **'விரிவிசும்பைச் செங்கதிரை விண்மீனை நிலவை, வெப்பவொளி மண்டிலத்தை விளங்கரு பாழ்வெளியை'** எனத் தொடங்கும் பாடலின் பொருட் செறிவும், பாடியவரின் குரட்பாங்கும் சிந்தை குளிரச் செய்ததுடன் விழிகளையும் குளமாக்கின. மெய்ப் பொருளை உணர்த்தும் இப் பாடல் மணிவாசகப் பெருமானது பாடலை நிகர்த்தது. — (குறளியம் : 1-2-82).

---

www.thamizham.net - Free E book No 7517

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
செந்தமிழ்ச் செம்பரிதியாய் ஒளிரும் தென்மொழியேயாம். இஃது ஏதோ புனைந்துரையோ அன்றிப் புகழுரையோ வன்று. தாங்கள் பொருந்திகையுற வேண்டுமெனக் கழறுவது மன்று. இத்தனையாண்டுகளாகத் தென்மொழி படித்ததால் ஏற்பட்ட உறுதிப்பாட்டலும், உள்ளார்ந்த ஒள்ளிய தமிழுணர்வின் அடிப்படையிலும் எழுந்த உண்மையுரைகளாகும். இறப்பை எதிர்ப்படுமுன் தங்களை எதிர்ப்பட அவாவுகிறேன். அதற்குரிய வாய்ப்பொன்று வருமென்று நம்பிக் காத்திருக்கிறேன்.

உ. த. மு. க. உலகந் தழீஇய உயர் பேரியக்கமாய் வளரத் தமிழர் வாழ்வு மலர இயன்றளவு இடும்பைக்கிடையிலுந் தொண்டாற்றுவேன். விருப்போடும், பொறுப்போடும் சிறப்புற வினையாற்றி எஞ்சிய வாணாளைப் பயனுறக் கழிப்பேன். தங்களையொத்த தறுகணாளராலேயே தமிழர் உய்தி பெறுவர். அன்பிலே, தங்கள் மாணக்கன், —பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

0:890: பெருமதிப்பிற்குரிய ஐயா வணக்கம். தாங்கள் 'தென்மொழி'யில் எழுதிய கட்டுரையைப் படித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தங்கட்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். — திருவாட்டி **பத்மா தஞ்சைவாணன், சென்னை-34**

0:891: அன்பு நிறை பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கட்கு வணக்கம். 17-1-82 ஞாயிறன்று நம் வேலூர் இலக்கிய அன்பர்கள் வட்டத்தின் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியமைக்கு என் சார்பிலும், என் குழுவின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்று முழுவதும் தங்களுடன் இருந்து உரையாடி மகிழ்ந்தமையை என் வாழ்வின் பேறுகளுள் ஒன்றாகவே கருதுகின்றேன். விழா நிகழ்ச்சிகளின் பின் விளைவுகள் மிகவும் மகிழ்ச்சி தரும்படி உள்ளன. நம் செயல்முறைகள்—உரைகள் அனைத்தையும் நண்பர்களும் பொதுமக்களும் பெரிதும் வரவேற்றுப் பேசுகின்றனர். ஒரு **முதியவர் பூணூலை அறுத்தெறிந்துவிட்டதாக என்னிடம் இன்று சொல்லி நன்றியையும் மகிழ்வையும் தெரிவித்தார்.** தங்கள் உரையில் தாங்கள் அளித்த திருக்குறள் விளக்கங்கள்—பாவேந்தரின் பாடலுக்கான இசையுடன் கூடிய விளக்கம் மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன.

வேலூர் **மாலை முரசு—தினத்தந்தி** தங்களுக்கு உச்ச முதன்மையளித்துச் செய்திகளையும் படங்களையும் வெளியிட்டுள்ளன. அவற்றை இம்மடலுடன் இணைத்துத் தங்களின் மேலான பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன். — **ம. நாராயணன்**, க. மு. **வேலூர், வ. ஆ.**

0: 892: அன்பார்ந்த ஐயா! வணக்கம். எளியேன் தென்மொழியைக் கடந்த 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து படித்து வரு

www.thamizham.net - Free E book No 7517

கிறேன். மறைமலையடிகள், பாவாணர் சிந்தனையை அடியொற்றிப் பாவலரேறுவின் கருத்துகள் மிகவும் தெளிவானவை, சரியானவை, விழுமியவை என்று உணர்ந்து போற்றுபவன். தமிழ்ச்சிட்டில் வரும் 'செயலும் - செயல்திறனும்' கட்டுரை ஒன்றே பாவலரேறுவின் அறிவு மாட்சிக்கு உரைகல். இக்கட்டுரை 'நோபல்' போன்ற பெரும் பரிசையும் தட்ட வல்லது. இது முகமன் — புகழ்ந்துரை - அன்று; கட்டுரையைத் தொடர்ந்து படித்து வரும்போதெல்லாம் நான் பெறும உணர்வு! இது நிற்க இத்தகைய பெரியார் புதிய அரசியல் இயக்கம் காண்பது செந்தமிழ்வானின் விடிவெள்ளியாக அமைதல் கூடும். திருவருள் துணைகிட்டுமாயின் நாம் எதிர்நோக்கும் உரிமைகள் கிட்டியே தீரும். இப்படி எண்ணுவது என் உள்ளப்பாங்கு. தி.மு க. ஆட்சியில் இத்துறையில் விளைந்த நன்மைகள் மிகச் சிலவே. தென்மொழி கூறிவந்தது போல் 'இந்தி எதிர்ப்பு' என்ற பெயரில் ஆங்கிலமே முன் வைக்கப் பட்டது அதன் விளைவே பல்கிப்பெருகும் English Medium பள்ளிகள்; வகுப்புகள். இல்லாவிடில் 'மாறன்' - தனியாள் தீர்மானம் ஒன்று பாராளுமன்றில் வரக்காரணமென்ன? அறிவு மாட்சிமை கொண்ட பாவலரேறுவின் தலைமையில் அனைத்துச் சிக்கல்களும் நன்கு ஆயப்பட்டுச் சரியான கோரிக்கைகள் நடுவண் அரசு முன் வைக்கப்படும் என்று நம்புகிறேன். அறிவு, தெளிவு, நல்லொழுக்கம் கொண்டோர்கள் கூசாமல் சார்பு கொள்ளும் இயக்கமாக உ. த. மு. க. வளரும் என்பதறிய பெருமகிழ்ச்சி. எதையும் ஆய்ந்துகாணும் தலைமை வீறுடன் மேற்செல்லும் என்ற நம்பிக்கையும் உண்டு. அன்புள்ள தொண்டன்.

— க. சந்திரசேகரன், தஞ்சாவூர்-1.

தென்மொழியன்பர் தியாகராசன் மறைவு!

நெடுநாளைய தென்மொழியன்பரும், தனித்தமிழ் ஆர்வலரும், காரைக்குடி தமிழியக்கப் பாசறையால் உருவாக்கப்பட்டுத் தமிழ் உணர்வு பெற்றவரும், கோவை, பெரியநாய்க்கன் பாளையம் "சிறீ இராமகிருட்டிணு மிசின் வித்தியாலயாக் கலைக் கல்லூரி"யின் தமிழ்த் துணைப் பேராசிரியரும், சிறந்த சொற்பொழிவாளருமான திரு. தியாகராசன், க. மு. (தமிழமுதன்) அவர்கள், கடந்த திசம்பர் மாதம், சாலையைக் கடக்கும்பொழுது, பேருந்து ஒன்றினால் மோதுண்டு உயிர் துறந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிரியப் பணியில், ஆளுமைத்திறமும் அன்பு உள்ளமும் கொண்டிருந்தவர். அக் கல்லூரியின் தமிழ்த்துறைக்கும், தமிழுணர்வுசான்ற மாணவர்கட்கும் அவர் தம் மறைவு பேரிழப்பாகும். அவர் மறைவிற்குத் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

www.thamizham.net - Free E book No 7517

தமிழ் நாட்டினத்திற்கும் பொருந்திய பொதுவுடைமை

வெங்காலூர் 'குணா'

(மாநாட்டில் 'குணா' அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் விரிவு)

உலக விளக்கம்

ஏதோ செருமானியில் தனித்து வளர்ந்த அறிவுக் கூறுகளைத் தழுவியதாக மட்டுமே மார்க்சியம் மலர்ந்து விடவில்லை. தமிழறிவு வளர்த்த சாங்கிய மெய்யியலின் பகுதிக் (பிரகிருதிக், கோட்பாடும் அணுவியல் கருத்துகளும் முதிரா இயங்கியல் கூறுகளும் இம்மானுவேல்கான்ட் என்னும் செருமானிய கணக்கியலாரும் மெய்யியலாரும் வகுத்த பேரண்டத் தோற்றவியல் கருத்துகளில் ஏறி உள்ளடங்கி நின்றன. அத்துடன் சீனம், எகிப்து, மெசப்பொட்டாமியா, கிரேக்கம், உரோம் போன்ற பண்பாடுகளில் வளர்ந்து அராபியர் வழியாகப் படர்ந்த அறிவியல் கூறுகளைத் தழுவி வளர்ந்த கருத்துகளும், டேக்கார்த்தே (1596-1650), பிரானசிசு பேக்கன் (1561-1626) சியார்ஃச் பெர்க்லி (1685-1753), தாவிது இயூம் (1771-1776), லீப்னிட்சு (1646-1716) போன்றோரின் வாயிலாக மேலை உலகில் குவிக்கப் பெற்ற கீழை உலக அறிவுக் கூறுகளும், தொகை நிலைகளாகி இயைந்திட, அவை புது நிலைகளாக மலர்ந்தன. அந்தக் கீழை அறிவு மேற்குலகில் புதிய நிலைகளாகியதைத் தழுவி வளர்ந்த உலக அறிவின் தொகைநிலையே மார்க்சியம். அவற்றுடன் அன்றைய மேலை அறிவியலின் துறைகளிலான கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் இயைந்தன. அவ்வகையில் மார்க்சு பெற்றெடுத்த உலக விளக்கத்தில் நம்முடைய முதாதையர் வளர்த்த அறிவுக் கூறுகளும் உள்ளடங்குவன. எம் முப்பாட்டனுக்கும் அதில் பங்கு உண்டு என நாம் பெருமைப் பாராட்டிக் கொள்ளலாம். அதனைக் கருதியே அன்றைய உலக அறிவின் - உலக வரலாற்றின் - முகிழ்ச்சி நிலை என்றே மார்க்சியத்தைக் கருதலாகும்.

அம் மார்க்சியம் வகுத்துக் கொண்ட உலகியல் பார்வையைப் **பொருள் முதல் இயங்கியல்** என்பர். புற உலகு உண்மை; அப்புறஉலகே அகஉலகில் நிழலிடச் செய்வதென்னும் உண்மையைச் சொல்வதால், அஃது பொருள்முதல் பார்வை. புறத்திற்கும் (புற வாழ்நிலைக்கும் - being) அகத்திற்கும் (அறிவிற்கும் எண்ணத்திற்கும் - thought) இடையிலான உறவுகள் ஒன்று மற்றதைத் தழுவி இருப்பினும், புறத்தை முதல் நிலையிலும் அகத்தை வழிநிலையிலும் வைத்ததால் அது பொருள்முதலியல் என்றாகும். புறத்தையும் அகத்தையும் முரணணிகளாக வைத்து, அவை முரணிய நிலையில் ஒன்று மற்றொன்றுவதையும், ஒன்றையொன்று தழுவியதாகவும் இருப்பதை

www.thamizham.net - Free E book No 7517

யும் உணர்த்தியதால் அஃது ஒருமையியல் (monism). ஒன்று மற்றொன்றுதலை இயற்பாடு (நிகழ்வு) என விளக்கியதால், அஃது இயங்கியல். பொருட்கள் இடையறாது தோன்றிக் கொண்டும் இடை நிலையில் உருப்படியாக வாழ்ந்து கொண்டும் பின்னர் மாய்ந்து கொண்டும் இருக்கின்ற இயங்குதிணையை வலியுறுத்திய தால் அவ்வாறானது அந்த இயங்கியல் ஒரே பொருளுக்குள் அமைகின்ற எதிர்மறைக் கூறுகளுக்கு இடையிலான முரண்பாடுகளே மாற்றங் களுக்கும் புது நிலைகளுக்கும் புதிய உறவுகளுக்கும் புதிய தன்மை களுக்கும் இயல்புகளுக்கும் காரணமாம் என்று எடுத்துரைக்கின்ற அறிவியலே இயங்கியல். சுருங்கச் சொல்லின், முரண்பாட்டின் இலக்கணமே இயங்கியல். இல்லாதது என்பது ஒரு நிலையில் ஒரு பொருளில் ஒரு தன்மையில் ஓர் உறவில் ஒரு வரம்பிற்குள் இல்லாதது என்றும்; இருப்பது என்பது ஒன்று அவ்வகையில் அவ்வரம்பிற்குள் உண்மையில் இருப்பது என்றும் சொல்லி, இன்மைக்கும் உண்மைக் கும் இடையிலான உறவைப் புறநிலையில் வைத்து விளக்கிய உலகப் பார்வையே இயங்கியல். மா பெரும் அறிவியல் விளக்கமே இயங்கியல். அவ் விளக்கத்தைக் கொண்டு அறிவியலின் துறைகள் யாதாயினும் - பொருளியலாயினும் குமுகியலாயினும் உளவியலாயினும் உடலியலா

கன்னாட்டுக் கல்வெட்டு

10 12-1981-ஆம் பக்கலிட்ட தினமணிச் செய்தித்தாளில் பின் வரும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

“சித்திரத்துர்க்கம் மாவட்டத்தில் அரிய கற்காலத்தியக் குகைச் சித்திரங்கள் இருப்பதாகத் தொல் பொருள் ஆராய்ச்சிக் குழு ஒன்று கூறியது.

இந்தக் கல்வெட்டு தென் இந்தியாவைச் சேர்ந்ததாக இருக்கு மென்று கருதப்படுகின்றது. தொல்பொருள் ஆராய்ச்சிக்குழுவின் தலைவரும். சித்திரத்துர்க்கம் அரசுக் கலைக் கல்லூரிக் கன்னட விரி வுரையாளருமான திரு. எச். சிரிசிலரத்தியா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இஃது ஏறத்தாழ ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும் கூறியிருக்கின்றார்.

இந்தப் பாறையின் அடிப்பகுதியிலும், குகையின் உள்ளேயும் மாந்தர், சூரியன், நிலா போன்ற சித்திரங்கள் காணப்படுகின்றன.”

இந்தக் குகை பழைய கன்னாட்டுப் பகுதியில் அமைந்திருப் பதாலும். இதிலுள்ள கல்வெட்டுகள் ஆறுயிரம் ஆண்டுகட்கு முந்தி யவை என்பதாலும், இவை தென்இந்தியாவைச் சேர்ந்தவை என்று கருதப் படுவதாலும், இவை தமிழரின் கல்வெட்டுக்களாகத்தான் இருத்தல் வேண்டும். இதை மேலும் நடு நிலைக் கண்ணோட்டத்துடன் ஆய்ந்தால் உண்மை வெளிப்படும்.— இளஞ்சேரல் முதுபாண்டியன்.

---

www.thamizham.net - Free E book No 7517

யினும் - அவை அவ்வவ்வற்றிற்குரிய தனித்தனி முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதன் அல்லது கடந்து நிற்பதன் இயல்பை விரித்துச் சொல்வது இயங்கியல். அவற்றின் வாயிலாகத் தோற்றுவிக்கப் படக் கூடிய புதிய நிலைகளை மக்களினம் தமக்கு உகந்த வகையில் ஆள்வது எங்ஙனம் எனலும் வழிமுறையையும் திணையையும் துறையையும் புகட்டுவது இயங்கியல். உலகெலாம் தழுவிய அறிவு விளக்கமே மார்க்சிய இயங்கியல். சமய விளக்கங்கள் போர்த்துள்ள பொய்ம்முகிலுக்குள் புதைந்து கிடக்கின்ற அகநிலைச் சார்பு உலக விளக்கங்களின் பின்புலத்தை விளக்குவது அந்த இயங்கியல். பொருட்கள் அகத்தால் தோற்றுவிக்கப்படுவதைப் பொய்ம்மைகள் என்றுச் சொல்லி அறிவுக்குப் புறம்பான ஒருதலைப் பார்வையை ஒரு தலையாக நீட்டிக்கின்ற கருத்தோட்டமே கருத்து முதலியல் என்று விளக்குவது அம் மார்க்சிய உலக விளக்கம். அச் சமய விளக்கங்கள் கற்பனையில் மிதப்பதை விடுத்து மண்ணுடனும் மக்களுடனும் ஒன்றுபடுமாயின, அவை தோற்பதையும் உணர்த்துவது அது. சமயங்கள் முன்னிறுத்துகின்ற பொய்ம்மை உலகுக்கும்; சுரண்டல் என்னும் மெய்ம்மைக்கும் அதைத் தழுவிய மெய்ம்மையான மாந்த உறவுகளுக்கும் இடையிலான கொப்பூழ் உறவுகளை விரித்துரைப்பது அவ்வறிவு. இம்மை உலகை மாற்றவல்ல பார்வையைத் தருவது இயங்கியல். ஆண்டைகளின் அரசியல் நலன்களுக்கு இன்றியமையா வகுப்பு விளக்கங்களே மதங்கள் என்று மார்க்சு விளக்கினார். எளிய மக்களின் இன்னல்களைக் கண்டு உளம்வெம்பி அகத்தை மாற்றினால் புறம் மாறி விடும் என்னும் மயக்கத்தைக் கருத்தாகப் பரப்பி உலகைத் துறந்து ஆண்டிகளானோர் தந்த விளக்கங்கள் உலகைத் தலைக்கீழாக நின்று பார்த்ததால் விளைந்த அகவழிப்பார்வை என்று சுட்டிக்காட்டி, அவர்களின் கூற்றை நிமிர்த்தச் செய்த உலகியல் பார்வையே இயங்கியல் பொருள் முதலியல்.

உலகைப் படைக்கவும் காக்கவும் இயக்கவும் ஒரு புற ஆற்றலைப் படைத்துக் கொண்ட சமயப் பார்வையை மறுத்து, அவ்வுலகிலான ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளடங்குகின்ற அக முரண்பாடுகளே உலகத்தின் தோற்றத்திற்கும் நிலைப்பிற்கும் மாற்றங்களுக்கும் காரணம் என்பதை விளக்குகின்ற உலகியல் பார்வையது. அறிவியல் துறையில்,

1. டார்வினுடைய (1809-1882) படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு,
2. ஆற்றலின் ஒரு வடிவம் மறுவடிவமாவது பற்றிய அறிவியல்-கணக்கியல் கண்டுபிடிப்புகள்,
3. உயிரணுக்களின் (cells) தொகையே உயிரென்பதும்; உயிரியக்கம் (metabolism) அவ்வுயிரிகளுக்கான வாழ்முறை என்றும் கண்டுப் பிடித்த உயிரியல் அறிவியல்.

www.thamizham.net - Free E book No 7517

போன்றவையே இயங்கியல் பொருள்முதல் பார்வையை வகுக்க மார்க்சுக்குப் பெரிதும் உதவின. மார்க்சிய இயங்கியலுக்குத் தனித் தன்மையைப் பெற்றுத் தருவது அவர் அம் மெய்யியலைச் செய்முறை அறிவியலுடன் ஒன்றி வளர்த்த சிறப்பே ஆகும்.

விடுதலை இலக்கணம்.

மார்க்சியம் வெறும் உலகியல் பார்வையாக மட்டுமே நின்று விடவில்லை. அது மாந்த விடுதலைக்கான இலக்கணமாகவும் மிளிர்கின்றது. மக்களின் படைப்பே விலைப்பண்டம். அப் பண்டம் அம் மக்களை எப்படி ஆட்டிப் படைக்கிறது என்பதை விளக்குவது மார்க்சியம்.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான உறவு படைப்பவனுக்கும் படைக்கப் பட்டப் பொருளுக்கும் இடையிலான உறவின் புறநிலை. முதலாளியிடம் படைப்புத் தொழிலுக்கு வேண்டிய இடு பொருளும் கருவிகளும் பிற ஏந்துகளும் உள்ளன. படைப்பின் வழித் துறைகள் (means of production) அவை. தொழிலாளியிடம் இருப்பதோ உழைப்பு எனும் உடலாற்றல மட்டுமே. அவ் வுழைப்பை ஒரு பண்டமாக்கி விலை பேசுகையில் அவன் முதலாளியிடம் உறவு கொள்கிறன். வெறும் கையோடு பட்டறைக்குள் புகுந்த அவன் முதலாளியின் உடைமையான கருவிப் பொறிகளை இயக்கி

உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு வாழ்த்து !

புலவர். **நாவை—சிவம்** இல. இ; மணப்பாறை.

உலகத் தமிழரை முன்னேற்றும்
ஒப்பில் கழகந் தன்னுடைய
அலகில் லாத தமிழன்பர்
ஆர்வத் துணையால் சமைகின்ற
நலமிகு தொடக்க மாநாடு
நானிலம் புகழச் சிறந்திடுக!
புலமிகு தலைவர் தென்மொழியார்
புதுமைக் கனவுகள் வென்றிடுக!

மலையெனக் கிடக்கும் தீமையெலாம்
மாற்றிடப் புதுவழி பிறந்திடுக!
கலைவுணர் வாளர் கவின்திறத்தால்
கனிதமிழ்ப் பெருமை விரிந்திடுக!
தொலைவில் வாழும் நம்குலத்தார்
தொல்லை ஒழிய வித்திடட்டும்!
அலையெனத் திரளும் தமிழ்ப்படைஞர்
அரிய முயற்சிகள் ஒளிதரட்டும்!

www.thamizham.net - Free E book No 7517

இடுபொருளைப் பண்டமாகச் செய்விக்கின்றான். இடுபொருளும் உழைப்பும் இயைந்த புது வடிவமே பண்டம். அதற்கு ஒரு மாற்று மதிப்பை (exchange - value) ஏற்படுத்தித் தருவது அதனுள் இயைந்து விட்ட உழைப்பாற்றலின் அளவேயாகும். முதலாளி தந்த இடுபொருளின் மதிப்பும் கருவிகளின் தேய்மானமும். நிலக்கரி, மின்னாற்றல், எண்ணெய் போன்ற செலவான எரிபொருட்களின் மதிப்பும், பட்டறைக் கட்டட வாடகையும் போன்றயாவற்றையும் அப்பண்டத்தின் அடக்கச் செலவிலிருந்து பிரித்து விட்டால் எஞ்சியிருப்பது அப்பண்டத்தில் ஏறி மறைந்து பொதித்துக் கிடக்கின்ற அத்தொழிலாளியின் உழைப்பின் மதிப்பே ஆகும். பொருண்மை வடிவம் பெற்றுவிட்ட உழைப்பாற்றலின் மதிப்பே உழைப்பின் மதிப்பு.

அந்த உழைப்பாற்றலின் மதிப்பை மணிக்கணக்கில்தான் மதிப்பிடுவர். அப்பண்டத்தில் அடங்கிவிட்ட உழைப்பாற்றலின் மதிப்பு பன்னிரு மணி நேர உழைப்பிற்குச் சமம் என்று வைத்துக் கொண்டால், முதலாளி அத்தொழிலாளிக்குத் தருகின்ற பணமோ ஐந்தாறு மணி நேர உழைப்புக்கு ஈடாக மட்டுமே இருக்கும். அவ்வாறு தரப்பட்ட ஐந்தாறு மணி நேரத்திற்கு ஈடான பணத்திற்குப் பெயர் கூலி என்பது. அஃதாவது ஐந்தாறு மணி நேரத்திற்கு மட்டுமே அத்தொழிலாளி தனக்கென உழைக்கின்றான். எஞ்சிய ஆறேழு மணி நேரம் அவன் முதலாளிக்காகக் கூடுதலாக இலவயமாக உழைக்கின்றான். அத்தகைய கூடுதல் உழைப்புக்கு **மிகை உழைப்பு** (surplus labour) என்று பெயர். அஃது அத்தொழிலாளிக்குத் தரப்படாத கூலி. அதனை முதலாளி **ஊதியம்** (profit) என்னும் பெயரில் சட்டப்படி பறித்துக் கொள்ளும் கயமை. இந்த உண்மையை உலகுக்கு எடுத்துணர்த்திய மிகை உழைப்புக் கோட்பாடு மார்க்சினுடைய கண்டுபிடிப்பு.

படைப்பு என்பது குமுகத்தின் கூட்டுச் செயல். அதனால் மிகை உழைப்பும் அக் குமுகத்தின் கூட்டுப் படைப்பு. அவ்வாறு தொகுக்கப் பட்ட மிகை உழைப்பின் தொகை நிலையே புதிய முதலீடாகிறது. முதலைப் படைத்தது உழைப்பே.

அதனைக் கருதியே மார்க்சு, தன்னிடமிருந்தே தன்னை இழந்து விட்ட மாந்தனே உழைப்பு என்னும் ஒரு புற வெளிப்பாடாகி அது 'முதல்' என்றழைக்கப் படுகிறது என்று சொன்னார். தன்னிடமிருந்தே தன்னை முற்றுமாக இழந்துவிட்ட மாந்தனே முதல் என்னும் ஓர் அக வெளிப்பாடாகித் 'தொழிலாளி' என்றழைக்கப்படுவதாகவும் அவர் விளக்கினார்.

ஒரு பண்டத்தின் மதிப்பு என்பது அதற்கு உள்ளடங்கிய பருநிலையிலாகிய குமுக உழைப்பே என்று மார்க்சு சுட்டிக் காட்டினார். முதலைப் படைத்த உழைப்பு அம்முதலையே தெய்வமாக நம்பி, தான்

www.thamizham.net - Free E book No 7517

நட்ட கல்லின் முன் அக் கல்லை நட்டவனே விழுந்து விழுந்து வணங்குவதைப் போன்ற காலத்தின் கோலத்தையும் புலப்படுத்தினார்.

"நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள் ளிருக்கையில்!
சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?"

என்னும் சித்தர் சிவவாக்கியரின் பாடல் கருத்தை ஒத்தது அக் கூற்று. புறக் கடவுட் வழிபாட்டைச் சாடி, அக வழிபாட்டை வலி யுறுத்துகின்ற இப்பாடல், படைத்தவன் என்றாகிய கடவுள் கல்லில் இலை; அவன் அக் கல்லை நட்டு வைத்த மாந்தனுக்கு உள்ளேயே இருக்கின்றான் என்று சொல்கின்றது. அதைப் போலவே, பாட்டாளி மாந்தன் படைத்த பண்டங்களில் அம்மாந்தன் இல்லை. அப் பண்டத்தை ஆக்கிய அப்பாட்டாளியின் உடலிலும் தொழில்திறனி லும்தான் படைப்பாற்றல் என்னும் வடிவத்தில் அந்த மாந்தன் இருக் கின்றான். அப்படைப்பாற்றல் புற நிலையிலாகி அம்மாந்தனுக்கு அப்பாலான புறநிலைத் திரட்சியாக அமைவதே அப்பண்டம். அப் படைக்கும் மாந்தனுக்கு உள்ளேயே அடங்கிய அவனுடைய உழைப் பாற்றலே அந்த படைப்பாற்றல் என்னும் பெருநிலை என்று வைத்து விளக்கினால் அவ்வுண்மை விளங்கும். அதனை அறியாத பாட்டாளி, அப்பண்டத்திடமே தன்னை இழந்தவனாக அப்பண்டத்தையே புற நிலைப் படுத்தி, அதற்கு அப்பால் மிக்குயரச் (transcend) செய்து,

அந்நாள் வருமா?

—கண்ணன்—

கல்லாதார் இல்லாத தமிழர் நாட்டைக்
காண்பதுதான் எந்நாளோ? தமிழுக் கிங்கே
எல்லாரும் பணிசெய்யும் இனிக்கும நாட்கள்
எப்போது தாம்வருமோ? இல்லந் தோறும்
தொல் தமிழின பெயர்தாங்கும் மழலைச் செல்வம்
துள்ளிவிளை யாடுகின்ற கால மென்றோ?
இல்லாமை அழிப்பதற்குத் தமிழ ரெல்லாம்
இனிக்கின்ற பொதுவுடைமை வளர்ப்ப தெந்நாள்?

சாதிமதம் இல்லாத தமிழர் நாட்டைச்
சமைப்பதுதான் எக்காலம்? தமிழில் பேசி
ஓதுகின்ற கலப்புமணம் கோடிக் கோடி
ஓயாமல் நடக்கின்ற நாளும் எந்நாள்?
பொதுவுடைமைச் செந்தமிழர் இல்லந் தோறும்
புதியதமிழ் ஆய்கின்ற நாள்தான் எந்நாள்?
மதுத்தமிழைப் பேசாத தமிழர்க் கெல்லாம்
மதிப்பில்லா நிலைமைதனைக் காண்ப தெந்நாள்?

www.thamizham.net - Free E book No 7517

'முதல்' என்னும் தெய்வமாக்கி வழிப்பட்டு அப்படைப்பிடமே அடிமை பட்டுக் கிடக்கின்றான். அதனை அயன்மையாதல் alienation) என்னும் வினைபாடாகச் சொல்லி மார்க்சு விளக்கினார் முதலாளியம் உழைக்கும் மாந்தனைப் பண்ட மாந்தனாக (commodity-man) ஆக்குகின்றது. தன்னையும் தன் ஆற்றலையும் உழைக்கும் மக்களினம் தாம் படைத்த முதலிடமே விற்பதை மார்க்சு எடுத்துரைத்தார். தொழிலாளி முதலைப் படைப்பதையும், அம்முதல் அவன் இனத்தைப் புதிதாகப் படைத்து விரிவாக்குவதையுமே முதலாளியக் குமுக உறவு என்று எடுத்துக் காட்டினார். முதலாளியத்திற்கு முந்திய குமுக அமைப்புகளிலும் அவ்வுழைப்பு உடைமையிடம் அடிமையுண்டு கிடந்த வரலாற்றை யும் விளக்கினார்.

தன்னையே தன் படைப்பு ஆகிய பண்டத்திடம் இழந்த மாந்தன் தன்னையே மீட்டுக் கொள்வதே விடுதலையின் இலக்கணம் என்றுரைத் தார். விற்பது வாங்குவது என்னும் அங்காடி உறவில் அவன் ஒரு கூறு என்றாகியதை விளக்கினார். விற்பதற்கும் வாங்குவதற்கும் இடையில் பண்டமாற்றுக்கு மாறாகப்பணம் என்னும் பொதுப்பண்ட மும், பண்ட மதிப்பை அளவிடும் அளவுகோலுமாகிய ஏட்டுப் பணமும், எழுந்த வரலாற்று நிலைகளை எடுத்துச் சொன்னார்.

பணத்திற்கும் மாந்தனுக்கும் மூவகை உறவுகள் உண்டு. பணத்திற்கு அடிமையாவோன் விலங்கு. பணத்தைக் கண்டு 'காத றுந்த ஊசியும் கடைவழி வாரா' என ஓடியவன் ஓடுகாலித் துறவி. மாறாகப் பணத்தை வென்று வாழ்பவனே மாந்தன். இந்நிலையில் உடைமையையும் பொருளீட்டு வழித்துறைகளையும் பொதுவாக்கினால் தான், செல்வத்தை மாந்தன் வெல்பவனாவான் என்னும் மாபெரும் வாழ்வியல் உண்மையைக் கற்பிப்பதே மார்க்சியம். அதுவே அதனு டைய விடுதலை இலக்கணம்.

அது குமுகவியல் செயற்பாட்டை — கூட்டுச் செயலை - வகுப்புப் போராட்டத்தைத் தழுவியது. இவ்வுலகில் இன்னலுற்றால் மறுபிறவி யில் இன்பமும் உவகையும் வரும் என்னும் சமயங்களின் போலி இலக்கணத்திற்குப் புறம்பான மெய்ம்மை விடுதலை இலக்கணம் மார்க் சியம்.

உழைக்கும் மாந்தன் தன்னையே தானே விரும்பி முதலிடம் இழந்து விடுவதில்லை. வாழ்வியல் கட்டாயம் அவ்வாறு செய்விக் கிறது அந்நிலையை எதிர்த்து அவன் கலகத்தில் இறங்கினால், அவன் ஒடுக்கப்படுகின்றான். அதைச்செய்ய வல்ல கருவி 'அரசு' என்னும் வன்முறைக் கருவி. அரசு என்பது சுரண்டலரின் வன் முறை வேல். படையும் குடையும் காவலும் சிறையும் சாட்டையும் கழுமரமும் அமைச்சும் ஆட்சியும் அதனுடைய கூறுகள். சுரண்ட லரின் அரசைத் தகர்த்தெறிந்து ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களின் மாற்று அரசை அமைப்பதே, புரட்சியின் அரசியல் இலக்கணம் என்

www.thamizham.net - Free E book No 7517

கிறது மார்க்சியம். தனியுடைமையை ஒழித்துப் பொதுவுடைமையை அமைப்பதற்கு முன்னர் இடைநிலையில் ஒப்புரவு(சோசலிசம்) என்னும் வாழ்வியல் இருக்கும் என்னும் விளக்கத்தையும் அது தருகின்றது.

பன்னூறு நூற்றாண்டுக் காலம் சுரண்டியும் அடக்கியும் ஆண்டு விட்ட ஆண்டைகளின் வகுப்பு மீண்டும் எதிர்ப்புரட்சிச் செய்து பழையச் சுரண்டலை மீட்காமல் செய்வதற்கேற்ப அப்பாட்டாளி வகுப்பு வல்லாண்மையை நிறுவுகின்றது. பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை (the dictatorship of the proletariat) என்னும் அவ்வழிமுறையைக் கடைப் பிடிப்பதே ஒப்புரவியல் என்னும் இடைநிலைக்குரிய பொருள். பிறநாட்டு மக்களும் அத்தகைய ஒப்புரவியல் புரட்சிகளைச் செய்து உழைப்புச் சுரண்டலுக்கு முடிவு கட்டி நன்கு ஆளக்கற்று உறுதிப் பட்ட பின்னர், அவ் வல்லாண்மையும் தொழிலாளர் வகுப்பும் அதனுடைய அரசியல் கட்சியும் மெள்ள மெள்ள உதிர்ந்துபடும். அப்போது அரசு என்னும் வன்முறை அமைப்பு இல்லாத அல்லது தேவையற்ற புதிய நிலை உருவாகும். அதுவே பொதுவுடைமை என்னும் பொன்னுலகமாகும் என்பதே மார்க்சியம் தருகின்ற விடுதலை இலக்கணம்.

மார்க்சியம் என்பது வெற்றுப் பொருளியல் கொள்கை மட்டுமன்று. அஃது அனைத்தும் தழுவிய மாந்த விடுதலையைக் குறியாகக் கொண்ட இயக்கம். அதற்குப் பொருளியல் விடுதலை அடிப்படையாக இருக்கத்தான் செய்யும். அப்பொருளியலை அடிக்கட்டு என்றால் ஆளும் வகுப்பு நலன்களுக்கு ஏற்ப அதற்கு மேல் வடிவமைக்கப் பட்டுள்ள மேற்கட்டுகள் (super structures) உண்டு. மெய்யியல், கலை, இலக்கியம், கல்வி, இலக்கியமொழி, சமயம், நம்பிக்கைகள், வழக்காறுகள் போன்றவை அம்மேற்கட்டுகள். அவை யாவும் உயிரோட்டமுடன் ஒன்றோடொன்று இயைபுடையவை. புற உலகைச் சார்ந்தது உடல். உடலைச் சார்ந்தது உள்ளம். உணர்வும் உள்ளமும் புற உலகை மாற்ற வல்ல உள்ளாற்றலை உடலுக்குத் தருகின்றன. உடலாற்றலைப் பெறச் செய்கின்றன அவ்வுடலாற்றல் புற உலகை மாற்றுகின்றது. புறவுலகு - உடல் - உள்ளம் என்னும் போக்கிலானது ஒருவழிப்பட்ட புறநிலைப் போக்கு. உள்ளம் - உடல் - புறவுலகு என்பது எதிர்வழிப்பட்ட அகநிலைப் போக்கு. அப் போக்குகள் இரண்டுமே ஒன்றையொன்றைச் சார்ந்த முரண்பட்ட இருவேறு பாதிகள். இந்த மார்க்சிய அறிவுக் கோட்பாட்டை மறந்து பொருளியல் என்னும் புற விடுதலையை மட்டுமே முற்றானதாகவும் முடிவானதாகவும் கருதுவது மார்க்சிய இயங்கியலுக்குப் புறம்பான ஒருதலைப் போக்கு. அத்துடன் நில்லாமல், அகவுலகை - எண்ணங்களின் வடிவான மேற்கட்டுகளை - மாற்ற வேண்டிய சார்பு நிலையை மறப்பது மார்க்சிய இயங்கியல் ஆகாது.

பொருளியல் மட்டுமே புரட்சி என்னும் பேச்சோடு அடங்கிவிட்ட தமிழகப் புரட்டர்களும் மிகுதீவிர 'இடது'சாரிப் போக்கர்களும் மேற்

www.thamizham.net - Free E book No 7517

கட்டுகளிலான எழுச்சிகளையும் மாற்றங்களையும் புரட்சியையும் மறந்தே நிற்கின்றனர். புறத்தை முற்றுமைப்படுத்தி அகத்தை மறந்தவர்கள் அவர்கள். எடுத்துக்காட்டுக்கு, சமற்கிருத எதிர்ப்பு என்பது நிலக்கிழமைப் பண்பாட்டின் தனி உருவகமான பார்ப்பனியத்தை எதிர்க்கின்ற உள்ளடக்கத்தைக் கொண்டது. தமிழகம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையில், அது வடவர் வல்லாட்சியை எதிர்க்கின்ற விடுதலை உணர்வின் வெளிப்பாடு. இதனை ஏற்க மறுத்து, தமிழின் மொழி இலக்கணத்தையும் மரபுகளையும் கொன்று, உதிரிப் (lumpen) போக்கில் சோற்றாலடித்த பிண்டங்கள் போல் பேசுவது மார்க்சியத்திற்கு முற்றிலும் புறம்பானது. குழப்பவியல் (anarchist) தன்மை கொண்டது. புரட்டர்களும் மிகுதீவிர 'இடது'களும் இவ்வுண்மையை எடுத்துச் சொன்னால் நம் மீது எரிந்து விழுவர்.

(தொடரும்)

அன்புத் தமிழ் வாழ்க!

முகநிலை!

அன்புத் தமிழ் வாழ்கவென்று பாடடி -கலை
இன்பத் தமிழ் வெல்கவென்றே ஆடடி!-தோழீ (அன்புத்)

இடை நிலை:

மின்னலிடை பின்னிவர மேனியெழில் கொஞ்சிவரக்
கன்னலிசைக் கன்னிமனம் காதலுற யாழிசையில்
(அன்புத்)

முரி நிலை:

வண்ண நடை கொண்டது எண்ணவளம் விண்டது
பண்ணினிசைக் சென்டது பண்பினெறி வென்றது
உண்ணினைவொளி தந்தது மண்ணின்முதல் கன்றது
கண்ணுநெறி சொன்னது பெண்ணினெழில் மின்னது
(அன்புத்)

மனப்பசி தணிப்பது மறைப்பொருள் தெளிப்பது
இனப்பகை தொலைப்பது விழுப்பொருள் விளைப்பது
நினைப்பினைத் தெறிப்பது நிறைப்புகழ் வளர்ப்பது
வனப்பினில் சிரிப்பது வளர்ச்சியில் திளைப்பது
(அன்புத்)

கலைத்தமிழ் வளத்தினைக் கருத்தினில் இருத்தி
நிலைத்தமிழ்த் திருப்புகழ் விருப்புற உரைத்துத்
தலைத்தமிழ் வழுத்துயர் தனித்திறன் கொழித்து
மலைத்தமிழ் நிலைத்திட மனத்தொளி செழித்தே
(அன்புத்)

– தி. நா. அறிவுஒளி., க. மு

www.thamizham.net - Free E book No 7517

அறிவியல் நோக்கில் தமிழர்களின் போக்கு - ஒரு மதிப்பீடு

—பர். சாலை இளந்திரையன்.

(கட்டுரையாளர் உ. த. மூ. க. தொடக்க மாநாட்டிற்கு வர வியலாமையால், தாம் அங்குப் பேசவிருந்த கருத்தை எழுதிவிடுத்துள்ளார்.)

நண்பர்களே,

உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் கருதி அமைக்கப்படுகின்ற இந்தக் கழகத்தின் தொடக்கவிழா மாநாட்டில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நான் மேற்கொண்டு நடத்திவரும் அறிவியற் பெரும் பணியின் அடிப்படையிலேயே நமது தமிழ்மக்களின் நடைமுறைகளை மதிப்பிட்டு உரையாற்றிட ஒரு வாய்ப்பு நேர்ந்தமை குறித்து மேலும் மகிழ்ச்சி கொள்கிறேன். "அறிவியல் நோக்கில் மக்களினப்போக்கு" என்னும் பொதுவான ஒரு தலைப்பில் பேசும்படி என்னைக் கேட்டிருக்கிறார்கள். ஆயினும், இது தமிழின முன்னேற்றக் கழகத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்ற நிகழ்ச்சியாக இருப்பதால், நமது தமிழின மக்களிடையே அறிவியல் நோக்கு எந்த அளவில் நடைமுறைப்படுகிறது என்பதை விளக்கியே இங்கே பேச விரும்புகிறேன்.

"வானிலே பறப்பதும் நீருக்குள்ளே மூழ்கி முக்குளிப்பதுமே அறிவியல் என்று எண்ணிவிடக் கூடாது. தீராத நோய்களுக்கு மருந்து கண்டறிவதும் ஏறுத மலைமுகடுகள் ஏற வழிவகைகள் காண்பதுமே அறிவியல் என்று கருதிவிடக் கூடாது. ஏன் நாத்திகம் பேசுவது மட்டுமே அறிவியல் என்றும் எண்ணிவிடக் கூடாது. இவையெல்லாம், மாந்தன் தன்னுடைய சிந்தனையை அறிவியல் அடிப்படையில் இயக்கியதன் விளைவுகளே. ஆயினும் மாந்தவாழ்வின் ஒவ்வொரு நேரான அசைவிலும் அறிவியல் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்; மனப்பிறழ்வுகளோ உடல் தளர்வுகளோ இல்லாத, நேரான மாந்த இயக்கத்திலே சிறந்த அறிவியல் நெறி இயல்பாகவே செயல்படுகிறது என்பதையும் நாம் மனத்தில் இருத்த வேண்டும். அதே சமயம், அறிவியல் நெறியிலிருந்து பிறழ்வதாலேயே மாந்தன் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சிக்கல்களை உண்டாக்கிக் கொள்ளுகிறான் என்பதையும் நாம் உணர வேண்டும்.

இரண்டு கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கிறோம்; இப்போது ஓர் உயரமான இடம் நமக்குக் கிடைக்கிறது; இந்தக் கற்களை, வெறுமே ஒன்றன் மீது ஒன்றாக வைப்பதற்கு மாறாக, முதற்கல்லின் மீது கொஞ்சம் சுண்ணாம்புச் சாந்தைப் பரப்பி இரண்டாவது கல்லை அதன் மீது பதித்துவைத்தால், இரண்டு கற்களும் ஒன்றை ஒன்று பற்றிக் கொள்ளுகின்றன; அவற்றை எளிதில் பிரித்து இறக்க முடிவதில்லை. இப்படி, எதையும் உறுதிசேர இணைத்து வைப்பதுதான் அறிவியல்.

www.thamizham.net - Free E book No 7517

இதே இடத்தில், சுண்ணாம்புச் சாந்துக்கு மாறாகக் கொஞ்சம் சண்டு சருகுகளையோ சாம்பலையோ பரப்பினால் இரண்டு கற்களும் ஒன்றோடு ஒன்று ஒட்டிப் பொருந்தமாட்டா என்பது நமக்கு எளிதாகத் தெரிகிறது. ஆனால் தமிழர்களாகிய நாம்; நமது வாழ்க்கைச் செயல்களில் இந்தத் தெளிவைப் பெற்றிருக்கவில்லை என்பதே தமிழினத்தின் தளர்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது.

நமது தமிழ்க் குமுகாயத்தை ஒரு கண்ணோட்டம் விடுங்கள்; நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று தமிழர் அனைவருமே தனித்தனியே நினைக்கிறோம் ஆனாலும், நமது மொழி-அடிப்படையிலும் அதைப் பயின்று பழகுவதன் மூலம் நம் அனைவர் உள்ளத்திலும் எழுந்து நிமிரக்கூடிய உணர்வுகளின் அடிப்படையிலுமே நாம் இணைந்திருக்க முடியும் என்ற இயல்பான 'அறிவியல்) பார்வை நம்மிடம் இல்லை அப்பார்வை இல்லாது போனதால், "சாதியின் அடிப்படையில் ஒன்றுசேர முனைகிறோம்; அல்லது மதத்தின் அடிப்படையில் ஒன்றுசேர முனைகிறோம். இவை இரண்டும் மாந்த மன ஒட்டத்தின் இயல்பான உணர்வுகளோ வாழ்வுக்கு இன்றியமையாதவையோ அல்ல எனவே, எந்த ஒரு மதத்திலும் சாதியிலும் நம்மால் நிலைத்து நிற்க முடியவில்லை. அஃதாவது, எந்த ஒரு கூட்டத்தோடும் நம்மால் ஒன்றிணைந்து நிற்க முடியவில்லை. ('மதத்தை மாற்றிக்கொள்ள-நாம் பிறந்த சாதியை மாற்றிக்கொள்ள-முடியாதே.' என்று திகைக்கிறீர்களோ? உண்மையில், நம்மிலே பலபேர் எந்த மதத்துக்கும் உரியவர்களாக இல்லாதது போலவேதான் நாம் எந்த சாதிக்கும் உரியவர்களாகவும் இல்லை. படி தாண்டாப்பத்தினி என்பார்களே அதுபோல, சாதிகளுக்கு உரிய சில சடங்குகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தவிர எந்தத் தமிழனும் எந்த ஒரு சாதியையும் மனமார ஏற்று அதனிலே இருக்கவில்லை என்பதே உண்மை.)

தாய்மொழி என்பது நாம் வேண்டாம் என்று சொன்னாலும் நம்மைவிடாது; அதன் வாயிலாக நம் உள்ளத்தில் படிந்து பரவியுள்ள தமிழ்ப் பண்பாட்டு ஓர்மை என்பதையும் நாம் வெறுத்துக் கை கழுவிவிட முடியாது. பார்க்கிறோமே,-உலகெங்கும் பரந்து கிடக்கும் நமது தமிழர்கள் மட்டுமல்லர், - தங்கள் தாய்மொழியை உதறிவிட்டு ஏதேதோ காரணங்களால் வேற்றுமொழிக் கும்பல்களோடு கலந்துவிட முனைந்தவர்களெல்லாம், அது நிலையான வாழ்க்கை நடைமுறையாக இல்லை என்பதை உணர்ந்து, புதிய பெரியதொரு மொழி வேட்கையோடு தங்கள் தங்கள் தாய்மொழிகளையும் அவை தந்த பண்பாடுகளையும் நாடி ஓடுகிறார்கள். இந்தப் பிரிவோட்டம், இன்று உலகெங்கும் நடந்த வண்ணமாக இருக்கிறது.

மொழி உறவைச் சொன்னால் எல்லோருக்கும் எளிதாக விளங்கும் என்பதாலேயே மொழியை முதன்மைப்படுத்தி, அறிவியல் நோக்குக்கு மாந்த வாழ்விலே உள்ள முதன்மையை எடுத்துரைக்க முயன்றேன்.

www.thamizham.net - Free E book No 7517

வாழ்வின் எந்த ஒரு செயலிலுமே அதற்கு அடிப்படையாக உள்ள கூறுகளை முதன்மைப்படுத்தாத பிறழ்ச்சி நம்மிடம் இருந்தே வருகிறது.

நம் தமிழர்கள் ஏற்பாடு செய்யும் ஒரு கருத்தரங்கு அல்லது ஒரு மாநாட்டு நிகழ்ச்சியையே எடுத்துக்கொள்ளுங்கள். குறிப்பிட்ட ஏதாவது ஒரு பொருளை அல்லது கருத்தை அலசி ஆராய்ந்து அதைப் பற்றி ஒருமுடிவுக்கு வருவதற்கே அந்தக் கருத்தரங்கை — மாநாட்டை அமைத்திருப்பார்கள். ஆயினும் அதற்குத் தேவையான அடிப்படை நெறியை மறந்து, கருத்துப் பரிமாற்றத்தை முந்திக்கொண்டு யாருக்காவது மலர்முடி சூட்டுதல், பட்டம் வழங்குதல், பொன்னாடை போர்த்துதல், பாராட்டுப் படித்து அளித்தல் என்னும் வேற்று நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி விடுவார்கள். எடுத்த எடுப்பிலேயே பாராட்டும் பொன்னாடையும் வந்து விடுவதால், அவற்றிக்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மட்டுமன்றி, தொடர்ந்து பேச வருகிற எல்லோருமே பாராட்டுக்கு உரியவரைப் பற்றிச் சிறிது பேசத் தொடங்கி, அங்கே திரண்ட பெருமக்களின் மனத்தில் மாநாட்டின் குறிக்கோளைப் பற்றிய ஓர்மையே படியாதபடி கருத்துச் சிதறல் செய்துவிடுவார்கள். பேச்சும் கேள்வியுமாக உள்ள நிகழ்ச்சியில் காட்சியும் கேள்வியுமான நாடகப் பண்பு ஊடாடும் போது, மக்களின் கவனம் இந்த நாடகத்தின் பக்கமே சாய்ந்து அடிப்படை நோக்கையே மறந்து விடுகிறார்கள்.

எண்ணிப் பாருங்கள்: தமிழர்களாகிய நாம் நடத்தியுள்ள மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் ஓர் அளவு உண்டா? ஒவ்வொன்றின் பெயராலும் எத்தனை மாநாடுகள்! எத்தனைக் கருத்துரையாடல், கலந்துரையாடல்கள்! அதன் பிறகும், அவை எல்லாம், நமது குமுகாயத்திலே நாம் விரும்பிநிற்கும் எழுச்சியையும் மலர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை என்றே சாம்பி நிற்கிறோம். ஏன் இந்த நிலை? நமது கருத்துப் பரிமாற்றத் தளங்களை அவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தும் அடிப்படை அறிவியல் நோக்கை நாம் மறந்து செயல்பட்டது அல்லவா இதற்குக் காரணம்! "ஒரு வாளைச் சுழற்றும் விசையினிலே இந்த வையம் முழுவதும் துண்டுசெய்வேன் — என நீ ளை இடையின்றி நீ நினைந்தால் அம்மை நேர்படுவாள் உன்றன் தோளினிலே" என்று புரட்சிப் பாவலர் (கவிஞர்) காட்டிய வழியை மறந்து, நமது நினைவுகளிலே வேறுவேறு ஊட்டுறுப்புகளுக்கு இடம் தந்து விடுவது அல்லவா காரணம்?

மொழியை விட்டு மதத்தையும் சாதியையும் முதன்மைப்படுத்துவதிலும், எடுத்த பணிக்குத் தேவையில்லாத புறத்துச் சடங்குகளை உள்ளே ஊடாடவிடுவதிலும் மட்டுமன்று; வாழ்வின் எந்தச் செயலிலுமே அறிவியல் நோக்கைப் புறக்கணிக்கும் ஒரு பிழைநடை நம்மை முழுமையாகவே ஆட்கொண்டிருக்கிறது..

www.thamizham.net - Free E book No 7517

மாந்தனுக்குத் தன்மான உணர்ச்சி மிகமிகத் தேவை. ஆனால் அது தவறான தன்மானமாக இருந்துவிடக் கூடாது. தன் தெளிவினால் ஏற்படுவது சீரான தன்மானம்; வெற்றுத் தன்முனைப்பினால் ஏற்படுவது தவறான தன்மானம். இந்த இரண்டுக்கும் வேற்றுமை தெரியாததால், நம்முடையவர்களிலே பலபேர் வெறும் தன்முனைப்பையே தன்மானம் என்று கருதிக்கொண்டு குமுகாயப் பொதுப்பணித் திட்டங்களுக்குத் தேவையான விட்டுக்கொடுத்தல் என்னும் இயல்பையே அழித்துக் கொள்ளுகிறார்கள்.

"விட்டுக் கொடுத்தல்" என்பது சரணடைதல் என்று எண்ணி விடக்கூடாது. ஒரு குமுகாயத்தின் நலன் என்று வரும்போது, அதைப் பற்றிச் சிந்திப்பவர்களிடையே சில கருத்து வேற்றுமைகள் எழலாம்; "எதை முந்திச் செய்வது?" என்னும் கேள்வி கூட எழலாம். இப்படிச் சமயங்களில் ஒவ்வொருவரும் தத்தம் கருத்தையே உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு இராமல், பிறரோடு இணங்கிச் சென்று ஒரு பொதுத்திட்டம் உருவாக உதவவேண்டும். இதைத்தான் விட்டுக் கொடுத்தல் என்று குறிப்பிடுகிறேன். நமது பெரியார் அவர்களும் இந்த அடிப்படையிலேதான், "பொதுப்பணியில் மானம் பாராட்டக் கூடாது" என்று சொல்லியுள்ளார்கள்.

"பலபேர் கருத்து இணக்கத்துக்கு வந்து ஒரு பொதுத்திட்டம் உருவாக்குவது செயல்முறை அல்லவா? அஃது எப்படி அறிவியல் நோக்கு ஆகும்?" என்றால் பல தனிமாந்தர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குமுகாயமாக வாழ வேண்டுமானால், அத்தனை பேருடைய எண்ணங்களின் கூட்டு இணைவிலேதான் அக் குமுகாயம் ஒன்றாகி உயர்வாகி விளங்க முடியும் என்ற தெளிவைப் பெறுவதே அறிவியல் நோக்கு; இந்த தெளிவைப் பெறாத எந்தக் குமுகாயமும் ஒற்றுமையோடு வாழமுடியாது. "நெல்லிக்காய் மூட்டைகள்" என்று பட்டஞ் சூட்டப்பட்ட நமது தமிழ்இனம், இந்த அறிவியல் நோக்கைப் புறக்கணித்த நாளிலிருந்தே அடியறுந்து சிதறிப் போய் விட்டது என்பதையும் பதியிழந்து குடிபெயர்ந்து தவித்து நிற்க வேண்டியதாயிற்று என்பதையும் நமது வரலாறு காட்டிக் கொண்டு இருக்கிறது.

நண்பர்களே, அறிவியல் என்ற உடனே- அது நாத்திகம் என்று, பலபேர் பதறி ஓடுகிறார்கள்; அதற்கும் நமக்கும் தொடர்பில்லை. அதுபுதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடும் அறிவியலார்களுக்கே உரியது என்று சில பேர் அதை ஒதுக்கி வைக்கிறார்கள். வாழ்வின் எந்த ஒரு செயலையும் அதற்கு உரிய தெளிவான திட்டங்களோடு நிகழ்த்திச் சிறப்பதே அறிவியல் நோக்கு, என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். தனிமாந்தன், குடும்பம், குமுகாயம் என்னும் ஒவ்வொரு தளத்திலும் அறிவியல் நோக்கே அடிப்படையாக அமைந்தால்,- இன்னல்கள் மாய்ந்து ஏற்றங்கள் உயரும் என்பதை நாம் உணர வேண்டும். ০

www.thamizham.net - Free E book No 7517

தமிழினக் காப்பு

'விடுதலை' ஆசிரியர், கி. வீரமணி.

(மாநாட்டில் கி. வீரமணி, அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு)

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுவார்கள், வில்லை எய்கிறவனுக்கு இலக்கு மட்டும் தெரிய வேண்டுமே தவிர வேறெதுவும் தெரியக் கூடாது என்று தமிழினத்திற்குப் பாடுபடும் போது-தமிழ்க் குமுகாயத்துக்குப் பாடுபடும்போது- தமிழினக் காப்பு நடத்துகிற நேரத்தில்- நாம் உறுதியாக இன்று செய்ய வேண்டிய கடமைகள் என்னவென்றால் ஒன்று இன்மானம் மிக முகாமையா (முக்கியமா)னது. நம்முடைய தன்மானம் நமக்கு முகாமை (முக்கியம்) அன்று. தனி வாழ்க்கையிலே தன்மானம் மிகத் தேவையானது. நாமெல்லாம் சேர்ந்து பாடுபடுகிற நேரத்தில், பல கருத்துடையவர்களாக இருக்கிற நாம், எல்லோரும் எல்லாக் கருத்துக்கும் ஒத்துப்போக வேண்டும் என்ற தேவை கிடையாது. ஒத்துப் போகவும் முடியாது. எனக்கும் ஐயா பாவலரேறு அவர்களுக்கும் சிலபல கருத்துகளிலே வேறுபாடு இருக்கலாம். அதேபோல் நம்முடைய ஐயா அப்பாத்துரையார் அவர்கட்கும் அவர்களுக்கும் வேறுபாடு இருக்கலாம். எத்தனையோ வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவையெல்லாம் வேறுபாடுகளாக இருந்தால்கூட, தனித்தன்மையோடு தமிழினம் ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்க வேண்டும் என்று சொல்லும் போது, வேறுபாடுகளை நாம் பெரிது படுத்திக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை, நமக்கு எது முகாமை, எது நம்மை ஒட்டி வைத்துக் கொண்டிருக்கிறது, எது ஓரணியில் நம்மைக் கூட்டுகிறது-என்பது தான் தமிழினத்திற்குப் பாடுபட வேண்டிய ஒரினம் - மிக முகாமையா (முக்கியமா)கக் கருத வேண்டிய செய்தியே தவிர, நம்மிடையே இருக்கின்ற சிறுசிறு பிரிவுகளை நாம் பெரிது படுத்திக் கொண்டு போய்க் கொண்டிருக்கக் கூடாது. நாம் அண்ணாசாலைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். நடுவழியில் அங்குத் தீடீரென்று ஓரிடத்தில் தீப்பிடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், நாம் எல்லோரும் சேர்ந்து அணைக்க முயற்சி செய்வோமே தவிர, தீப்பிடித்த கடை யாருடையது; எந்த நேரத்திலே தீபபிடித்தது, இப்பொழுது நல்ல காலமா, இராகு காலமா, என்று பார்த்துக் கொண்டு, நாம் கணியம் கேட்டுக் கொண்டு, அதைத் தகுதி பார்த்துக் கொண்டிருப்போமா ? (கைதட்டல்) தமிழன் என்ற உணர்வு இருக்கின்றதைவிட முதலாவது உணர்வுள்ள மாந்தன் என்று ஒருவனை எவன் நினைத்தாலும் அவனே மாந்தநேயத்தின் உச்சக் கட்டத்திற்குப் போவான். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் எல்லைக் கோடுகள் உண்டு. மாந்த நேயத் (மனிதாபிமானத்)திற்கு எல்லைக் கோடு உண்டா? அன்பு (தயவு)கூர்ந்து நினைத்துப் பாருங்கள். மாந்தநேய (மனிதாபிமான)த்திற்கு எப்படி எல்லைக்கோடு கிடையாதோ, அது போலத்தான்

www.thamizham.net - Free E book No 7517

தமிழ் மானத்திற்கும் எல்லைக்கோடு கிடையாது என்று நாம் அறிவிக்கும் (பிரகடனப் படுத்தும்) மாநாடு நம் **தமிழினக் காப்பு மாநாடு** (கைதட்டல்). இதை நாம் மிகத் தெளிவாகக் காட்டியாக வேண்டும்.

நாம் பண்பாட்டால் ஒரே வயிற்றிலே பிறந்தவர்கள்தாம். ஒரே தாயின் பிள்ளைகள்தாம். ஒரே தாயின் பிள்ளைகள் பல உருவத்தில் இருக்கலாம். பொதுவுடைமை (கம்யூனிசம்) என்ற அடிப்படையில் உள்ள நாடுகளுக்கு எல்லைக் கோடுகள் இருக்கின்றன. இருந்தாலும், ஒரு பொதுவுடைமை (கம்யூனிசம்) இன்னொரு பொதுவுடைமையை (கம்யூனிசத்தை) மதிக்க வில்லையா? உருசியப் பொதுவுடைமைக்கு (கம்யூனிசத்துக்கு) இரு எல்லை உண்டு. சீனப் பொதுவுடைமைக்கும் (கம்யூனிசத்துக்கும்) எல்லை உண்டு. ஆனாலும் பொதுவுடைமை (கம்யூனிசம்) என்று சொல்லும் போது, ஐ. நா. பொது மன்றத்தில் பொதுவுடைமை (கம்யூனிசம்) ஒன்று சேரவில்லையா? அப்படிப்பட்ட உணர்விலே, உந்தப்படும் போது, இனமான உணர்விலே ஏன் நாம் இந்தக் கொடியை ஏந்திக் கொண்டு, ஏன் உந்தப்படக் கூடாது என்று கேள்வி கேட்பதற்கு முன் வந்திருக்கிறோம். கேள்வி கேட்கப் பட வேண்டிய கட்டம் வந்து விட்டது (கைதட்டல்). **இந்தக் கேள்விகளுக்குத் தப்புபவன் தமிழனாக இருக்க மாட்டான்.** (கைதட்டல்).

இன்றைக்குப் பேசுபவர்கள் யார்? நீரோட்டம் நீரோட்டம் என்று பேசுகிறவர்களுக்கா தமிழினக் காப்பு என்று சொல்லுகிறோம். நம்முடைய பெருமதிப்பிற்குரிய 'டாக்டர்' **கலைஞர்** அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் ஐயா பாவலரேறு அவர்களுடன் எங்களைச் சிறைச்சாலையில் வைத்திருந்த போது ஒரு சொல் அதிகமாக அடிபட்டது நீரோட்டத்தில் கலக்கவில்லை இவர்களெல்லாம். தேசிய நீரோட்டத்தில் கலக்கவில்லை.அதனால்தான் இவர்கள் வெளியே எட்ட இருக்கிறார்கள் என்று. இந்த நாட்டின் 35 ஆண்டுக்கால உரிமைக்(சுதந்திரத்திற்)குப் பின் இந்த நாட்டில் உண்ண உணவுக்கு உறுதியில்லை. உடுக்க உடைக்கு ஒப்புறுதி (உத்திரவாதம்) இல்லை. இருக்குமிடத்திற்கு இடம் இல்லை. இந்த மூன்றுக்கும் சிறைச்சாலைக்குள், இருந்தால் (உறுதி) உண்டு என்றால், இந்த உரிமையை(சுதந்திரத்தை)விடச் சிறைச்சாலை மேலோங்கி இருக்கின்றது என்று கருதுகிறேன் என்றால் — அங்கே உள்ளே இருக்க விருப்பப் படுவார்கள்.

அப்படிப்பட்ட நிலையிலே அங்கு என்ன சொன்னார்கள். நீரோட்டம் நீரோட்டம் என்று அடிபட்டபோது, அப்போது கலைஞர் மிக அழகாகச் சொன்னார்கள். "ஈரோடு போகிறவர் நாங்கள் நீரோடு போக வேண்டிய தேவை(அவசியம்)இல்லை", என்று வேடிக்கையாகச் சொன்னார். எனவேதான் நாம் ஈரோடுபோக வேண்டும் நீரோடு போகக்கூடாது. எதிர்நீச்சல் அடிக்கக் கூடிய

www.thamizham.net - Free E book No 7517

நிலையிலே இருக்க வேண்டும். நம்முடைய வழக்கறிஞர் ஐயா அவர்கள் எடுத்துச் சொல்லும்போது சற்று நேரத்திற்கு முன்புக்கூட சொன்னார்கள் நீரோட்டம் தடைபடாது பாயும் என்று. நீரோட்டம் தடைபட்டால் எதிர்நீச்சல் அடித்து வெற்றிபெற அணியமாகுங்கள். எனவே தமிழர்கள் தமிழினம் ஒன்றுபட வேண்டும். அஃது இங்கே இருந்து, ஐயா பாவலரேறு போன்றவர்களால் உள்ளேயிருந்து தொடங்கப் படவேண்டும். தமிழன் என்று சொன்னால் அவன் யார்? மிகத் தெளிவாக்கப்பட வேண்டும் தமிழ் பேசுகிறவர்களெல்லாம் தமிழனா? தெளிவாக்கப்பட வேண்டும். தமிழ் மண்ணிலே பிறந்தவர்களெல்லாம் தமிழனா? தெளிவாக்கப் பட வேணடும். தமிழனை ஏய்த்துக் கொண்டு தமிழன் பெயரால் வாழ்கின்றவர்களெல்லாம் தமிழனா? (கைதட்டல்).

தமிழன் யார்? நீண்ட நாட்களுக்குப் பிறகு - கேட்கப்படாத கேள்விதான். கேட்டுத் தொலைக்கப்பட வேண்டியிருக்கிறதே தவிர வேறு கிடையாது. தமிழன் யார் என்பதிலே தமிழினம் எது என்பதே மிகத் தெளிவாகச் சிந்திக்கப்பட வேண்டிய நிலையிலே இருக்க வேண்டும். (கைதட்டல்). 'தன்னை இந்து' என்று சொல்லிக் கொள்பவன் தமிழனாக மாட்டான். தான் சாகும்போது தனது கல்லறையிலே 'இந்து' என்று எழுதப்பட வேண்டும் என்று சொல்லுகிற எவனும் தமிழனாக மாட்டான். அவன் இந்துவாக, கீழ்ச்சாதியாக இருப்பானே தவிர, வேறு யாராகவும் இருக்க முடியாது. எனவேதான் தமிழன் என்றால், அவன் 'வருணாசிரம தர்ம'த்திற்குரிய இந்துவாக இருக்க மாட்டான் தமிழன் என்று சொன்னால் தனமானத்தை விட்டுக் கொடுப்பவனாக இருக்க மாட்டான். தமிழன் என்றால் முறைகளைப் பற்றிக் கவலையில்லை என்று கருதுகிறவன் தமிழனாக இருக்க மாட்டான். தமிழன் என்றால், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொல்லக் கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றவனாக இருப்பான்; ஆனால் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதற்காக முறைகேடாக நடந்து கொள்ளும் தமிழனாக இருக்க மாட்டான் என்று மிகத் தெளிவாக அறிய வேண்டும். புரட்சிப் பாவேந்தர் சொல்வதைப் போல, நெஞ்சில் நினைப்பதைச் செயலில் நாட்ட வேண்டும். தமிழ் இனத்தின் கொடி தாழாமல் பறக்க வேண்டும். தமிழினத்திலுடைய காப்பு என்று சொன்னால், தமிழினம் எது என்று தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இருக்க முடியும். தமிழினத்தை நேரிடையாக எதிர்க்க முடியாதவர்களெல்லாம் 'நாங்கள் தமிழர்கள்' நாங்கள் தமிழர்கள் என்று சொல்லக் கூடிய நிலையிலே இருப்பார்களேயானால், தமிழினம் எந்த நிலைக்கு ஆளாகும் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் தமிழக குழுகாயத்திலே தமிழ்ப்பண்பாட்டுப் புரட்சியை வேண்டுபவர்கள் உருவாக்கிக் கொண்டிருப்பதற்கு நாம் உறுதுணையாக இருப்போம் என்பதை இந்த மாநாட்டின் வாயிலாக நாங்கள் சொல்லுகின்றோம்(கைதட்டல்)

www.thamizham.net - Free E book No 7517

சில நாட்களுக்கு முன்னாலே திராவிடக் கழகத்தின் சார்பாக பெண் விடுதலை மாநாட்டிலே ஒரு தீர்மானத்தைக் கூட உறுதி எடுத்துக் கொள்ள முனைந்தோம். அதில் **பெயர்களைக்கூட தனித்தமிழ்ப் பெயர்களாகக் குழந்தைகளுக்கு வைக்க வேண்டும் என்று. ஏனென்று கேட்டால் இப்பொழுது பெயர்களிலே கூடத் தமிழினத்தினுடைய உணர்ச்சியைக் காட்டுவதாக இல்லை. நரேஷ், சுரேஷ்** என்று எதையோ வைத்துத் தேவையில்லாமல், தமிழ் நாட்டில் தமிழினுடைய பிள்ளையா என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. அதற்கு மிகக் குறைந்த அளவு – நீங்கள் போராட்டத்தில் இறங்க வேண்டாம். நீங்கள் பெற்றுத் தொலைக்கிற குழந்தைகளுக்காவது தமிழ்ப் பெயரை வைத்துத் தொலையுங்கள் என்று சொல்ல வேண்டிய நிலையில் உள்ளோம் கைதட்டல்). ஏனென்றால் பிள்ளை ஒரு தொல்லை என்று பல பேர் கருதுகிற காரணத்தினால்தான் 'தொலைக்க வேண்டும்' என்ற சொல்லைப் பயன்படுத்தினேன். பல பேர் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; எவன் புத்தென்னும் நரகத்திற்குப் போகிறானோ, நம்மைப் பிறப்பிப்பதற்காக - பிழைப்பதற்காக - என்று நினைக்கிறானோ,அவன் வேண்டுமானால் வடமொழிப் பெயர்களை வேறு படுத்தி வைத்துக் கொள்ளட்டும்.

'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'என்று நம்பிப்பிறக்கிற குழந்தைகளுக்காவது தமிழ்ப் பெயரை வைக்கக் கூடாதா? தமிழனுக்குத் தமிழ்நாட்டில். தமிழ்ப் பெயர் கிடையாது. தமிழ்நாடு என்று சொல்வதற்குக் கூடத் தகுதி (யோக்கியதை)கிடையாது. அதற்கு ஒரு பேரறிஞர் அண்ணாவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியுந்தான் இந்நாட்டிற்குத் தேவைப்பட்டது. அதன் கரணியமாகத்தான் இங்குத் தலைகீழான முறை ஏற்பட்டிருக்கிறது.எனவே தேர்தல் முகாமை(முக்கியம்) அன்று; தமிழினக்காப்பு முகாமை(முக்கியம்).தமிழினத்தின் காப்பு முகாமை(முக்கியம்)ஆனால் தமிழினப் பண்பாட்டுத் துறையிலே, குமுகத் துறையிலே, எல்லாத் துறையிலும் தமிழினம் விடுதலை பெற்றாக வேண்டும். **தமிழினத்தின் விடுதலைக் கூட்டணியாக இந்த மாநாடு திகழ வேண்டும். தமிழினத்தின் விடுதலைக் கூட்டணியாகத் தமிழினக்காப்பு மாநாடு திகழ வேண்டும்** என்று கூறிக் கொண்டு.இங்குத் தொடங்கி வைப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன் -என்று கூறிக்கொண்டு இங்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். (நீண்டநேரக் கைதட்டல்).

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— **அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7517

உண்மைகள் மேலெழுகின்றன !

கடலுக்கடியில் அரசியல்

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவின் புகழ் பெற்ற துறைமுகப் பட்டினமாக விளங்கிய பூம்புகாரின் ஒரு பகுதி கடலுக்கடியில் மூழ்கிக்கிடக்கிறது என்பதைப் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பே ஆய்வாளர்கள் கண்டுபிடித்தும்,கடலுக்கடியில் அகழ்வாய்வு செய்ய இப்போதுதான் முழு முயற்சி எடுத்துள்ளோம். காலத் தாழ்வுக்குக் காரணம் ஆழ்கடல் ஆய்வில் அரசியல் கலந்ததுதான்.

1962 முதல் 64 வரை நடுவண் தொல்பொருள்துறையால் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட முகாமைத் தடயங்களில் ஒன்று சிறிய கப்பல்கள் நிற்பதற்காகக் கட்டப்பட்ட "செட்டி" -கள். இதைத்தவிர பிரெஞ்சு நாட்டு ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், கடலின் அடிமட்டத்தில் இரும்புத் தொடர்பான இடிபாடுகள் இருப்பது தெரிய வந்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு,காலஞ்சென்ற பேராசிரியர் பண். டி. என். இராமச்சந்திரன் 1966-ஆம் ஆண்டில், நடுவண் அரசுக்கு முன்வைத்த விளக்க அறிக்கையில். காவிரிப் பூம் பட்டினத்தில் ஆழ்கடல் அகழ்வாய்வு நடத்த நடுவண் தொல்பொருள் துறையின் இசைவைக் கேட்டிருந்தார். அத்துறை. அதே சமயத்தில், குசராத்து மாநிலத்தில் உள்ள 'புரோச்' பகுதியில் ஆழ்கடல் ஆய்வு செய்ய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருந்ததால், இதற்கு நடுவண் அரசிடமிருந்து. இணக்கமான விடை வரவில்லையாம்.

1973-ஆம் ஆண்டு, பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனமும், பிரெஞ்சுப் பல்கலைக் கழகமும் ஒன்றுசேர்ந்து பூம்புகாரில் ஆழ்கடல் ஆய்வு நடத்த நடுவண் அரசிடம் ஒப்புதல் கேட்டன. ஆழ்கடலில் மூழ்கிக் கிடப்பதாகக் கூறப்படும் உரோமானியக் கப்பல்கள், தங்கக் காசுகள், வயிரங்கள், போன்ற விலைமதிப்பற்ற பொருள்கள் கிடைத்தால் அவற்றை நடுவண் அரசுக்கே தாங்கள் கொடுத்து விடுவதாகவும், பழைய நாகரிகத்தைப் பற்றி அறிவதே தங்களது நோக்கம் என்றும் அந்தப் பிரெஞ்சுக்குழு கூறியிருந்தாலும்,நடுவண் அரசு இந்திய நலக்காப்புச் சட்டத்தின்படி மேல்நாட்டவருக்கு இசைவு கொடுக்க மறுத்து விட்டது. உலக ஆய்வாளர்களிடையே பூம்புகார் ஆய்வைப்பற்றிய பேச்சு அதிகம் அடிபடவே, 1974-இல் நடுவண் தொல்பொருள் துறை,ஆய்வு நடத்த ஒரு திட்டத்தை வகுத்தது. ஆனால், பணநெருக்கடியின் காரணமாக அஃது ஒத்திப் போடப் பட்டது.

இத்தனை ஆண்டுகள் கழித்து, வரும் சனவரி மாதத்திலிருந்து, தொடர்ந்து நான்கு மாதங்களுக்குத் தமிழக அரசு, நடுவண் தொல் பொருள் துறையின் ஒப்புதலோடு, கோவாவிலுள்ள நடுவண் கடல் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியோடு இந்த அகழ்வாய்வை நடத்தவிருக்கிறது ! செலவைத் தமிழக அரசே ஏற்கிறது ! — டி. கே. வி.

நன்றி : ஆனந்த விகடன், 22-11-81.

www.thamizham.net - Free E book No 7517

நமக்கு வந்த ஒரு 'புதிர்' மடல்!

(ஆசிரியர் குறிப்பு: கீழுள்ள உரையையும் பாடலையும் கொண்ட அஞ்சல் உறை ஒன்று அண்மையில் நமக்கு வந்துற்றது. அது சென்னையில் பொறியியல் கல்லூரி (Engineering College) என்னும் அஞ்சல் முத்திரை கொண்டுள்ளது. மடலை எழுதியவர் ஒரு முதியவராகத்தான் இருத்தல் வேண்டும் என்று அதிலுள்ள கையெழுத்து காட்டுகின்றது. ஆனால், மடலிலுள்ள செய்தி புதிராக உள்ளது. எவரோ ஒருவரிடமோ சிலரிடமோ நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மடல் சுட்டுகின்றது. மடலில் உள்ள குறிப்புரைகள், சென்ற உ. த. மு. க. மாநாட்டுச் சிறப்பிதழில் வெளிவந்த இரண்டு மடல்களில் உள்ள செய்திகளையும் தழுவுவனவாக உள்ளதும் தெரிகிறது. மற்றபடி வேறொன்றும் வெளிபடையாக விளங்கவில்லை. இருப்பினும் மடலை எழுதியவர் வேண்டிக்கொண்டபடி மடலை வெளியிட்டுள்ளோம். அவர் கொடுத்த, அல்லது அவர் போல் பிறரும் கொடுக்க விரும்பும் எச்சரிக்கைப்பற்றி ஒரு சொல்: நாம் என்றும் எதையும் எளிதாக எண்ணுவதுமில்லை; செயல்படுவதுமில்லை. எனவே, எதைப்பற்றியும் யாரும் கவலைப்பட வேண்டுவதில்லை. இயற்கையின் போங்கு நிலை பற்றி நாம் நன்கு அறிவோம். எச்சரிக்கை நம் இயக்கத்துடன் இயைந்தது. நம் மேலும், நாம் கொண்டகொள்கையின் மேலும் அக்கறைகொண்டஅணைவர்க்கும் நம் நன்றி. —ஆ-ர்.)

மடல்

'உண்மையான ஏழையின் சொல் அம்பலம் ஏறும் ஏறும்.'

தென்மொழியின் போர் ஏறே!

இயக்கம் அமைக்கும் ஏதம் நிறைந்த இந்த நாளில் எத்தரையும் ஏய்ப்பரையும் இனங்கண்டே செயல்புரிவீர். 'தென்மொழி' இதழினுள் இடம் தருவீர் என்று நும்மை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். பின் வரும் பாக்களைத் தப்பாமல் வெளியிடுவீர்! செய்வீரா?

1) எண்ணியுள செல்வர்பால் ஏங்கி, ஏ மாறலுக்குப்
பண்ணிவைத்த பாவைகளா தென்மொழிப் பாங்குளார்?
நண்ணி இருவராய் ஏடெடுத்து நூற்றெழுதிக்
கண்ணழித்துக் காட்டினர், கண்டு!

2) தேங்கிய சொல்லால் தெரிந்து தெரிந்துமே
ஓங்கும் நகருளார் யாவரையும் —தாங்கியே
தேற்றுவார், ஆற்றுவார், போற்றிப் புகழ்தருவார்!
சாற்றிடும்எம் வாய்ப்பறைகேள் என்று!

3) இவர்தாம், இளந்தமிழீர்! எண்ணி விழிமின்!
கவறுகொண்(டு) எத்துங் குறும்பர்! —தவறின்றிச்
சூழ்ச்சியும் செய்யுவார், சேர்ந்தும் தனித்தும், தம்
தாழ்ச்சியால்! தேர்ந்தறிவீர், நீர்!

www.thamizham.net - Free E book No 7517

4) தென்மொழியின் நல்லாசான், விண்மொழிக் கென்றுமே
இன்புற்றுத் தாம் மகிழார்; இன்னலின் — துன்பிற்கே
தாம்தொழுவார் என்றறிமின்! தீண்டும் பிழையுணர்வால்
தாம் தழுவித் தூண்டாதீர், காண்!

—'கொங்குச்சேய்'
தங்கிடம் — தாம்பரம்.

ஐயா! நீடூழி வாழ்க!

அகவை(வயது)சென்று விட்டது. கண் பார்வையும் சரி இல்லை. எழுத்தை மன்னிக்கவும்.

இந்த ஆட்களையும், இவர்களைப் போன்றவர்களையும் நெடு நாட்களாகவே பார்த்து வருகிறேன். சாதிப்பித்தும், ஊர்ப்பித்தும், 'சாமிசாட்டி' மதவெறியும் கொண்டு, பேய், பிசாசாக அலையும் பகல் 'வேசக்' காரர்கள். நம்ப வேண்டாம். 'தந்தை பெரியார் குழந்தையை'ப் பேணி, இதைப் போல உள்ளவர்கள் கையில் ஒப்படைக் காதீர்! மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

'தை' பிறந்து விட்டது. இனிமேல் நுமக்கு எல்லாம் நல்லபடியே நடந்துவரும். செவ்வேள் அருள் கிட்டட்டும். பாடல் போடுக ஓம் சிவம்.

தலைமை தாங்கும் தமிழே!

தலைமை தாங்கும் தமிழே; உன்றன்
தொன்மை போற்று கின்றேன் —வன்மை,
மென்மை வியந்து நின்றேன்!
கலைகள் ஈன்ற தமிழே; நீயோர்
கன்னி யென்ப துண்மை —அமுதும்
உன்னைப் போன்ற வினிமை!

சோலை மலரும் தமிழே; உன்னைச்
சுவைக்கும் வண்டு யானே —உலவும்
செய்யுள் யாவும் தேனே!
ஞால மொழிகள் யாவும்; விண்ணில்
தெளியும் 'மீன்'களாகும் —தமிழே
நிலைத்த 'கதிரு' மாகும்!

மாண்பு மிக்க தமிழே: உயர்ந்த
மலையுள் இமய மலையே —ஏனை
மொழிகள் பரங்கி மலையே!
மேன்மை கொண்ட தமிழே; நீதான்
மேலும் உயரு தற்கு —நாளும்
முயன்று பாடு படுவேன்!

— வேலூர். ம. நாராயணன், க. மு

www.thamizham.net - Free E book No 7517

0.886: பேரன்புடையீர்; தமிழ் இனத்தின் காப்பு அரணாகத் தாங்கள் அமைத்துள்ள இயக்கத்தின் தொடக்க மாநாட்டு வெற்றி எங்களைப் பெருமிதம் அடையச் செய்கிறது. இந்த இயக்கத்தின் செயல்பாட்டிலும், உறுதிப் பாட்டிலும் எங்கள் மன்றம் அளவற்ற அக்கறை கொண்டுள்ளது. இயக்கத்தின் வளர்ச்சிக்கு எங்களால் இயன்ற அளவு உறுதுணையாய் இருப்போம். வாழ்த்துகள்.

— செயலர், ஊற்றங்கரை தமிழ்ச்சங்கம், ஊற்றங்கரை.

0.887 அன்புடையீர், தங்கள் மாநாட்டுச் சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். 1959- இலேயே தொடங்கிய இயக்கச் சிந்தனை உண்மை வடிவம் பெற இவ்வளவு காலமானதற்குக் காரணம் இயக்க அன்பர்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளில் இருப்பதால், வேலை போய்விடுமே என்று அச்சத்தால், இயக்கத்தை வலுப் பெறச் செய்யவில்லை என்று கூறினீர்கள். ஆனால் வேறு பல தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அரசு வேலையில் இருந்தும் துணிந்து மறைவாக ஈடுபட்டது மல்லாமல் சிலர் வேலையையும் நெருக்கடிக் (Emergency) காலத்தில் இழந்ததைக் கண்டிருக்கிறேன். அதுபோல் ஈகம் (தியாகம்) புரியத்துணிவோர் இருந்தால்தானே எந்த இயக்கமும் வளரும்!

அடுத்து, நம் நாட்டில் பெருந்தலைவர்கள் தொண்டு செய்ய முன் வரவில்லை என்று கூறுமிடத்து, தமிழ்நாட்டுத் தலைவர்களில் காமராசரும் பெரியாரும் தவிர்த்து ஒருவருமில்லை என்றீர்கள். அது போல் இந்திய அளவில் காந்தியைத் தவிர்த்து ஒருவருமில்லை என்று கூறாமல் வேறு நாட்டுத் தலைவர்களைச் சிறப்பிக்கப் போய் விடுகிறீர்கள். அப்படியானால் காந்தியைக் கூடவா உண்மையாகத் தொண்டாற்றுதவர் என்று நினைக்கிறீர்கள்? அவர் குசராத்தியாக இருப்பினும் தென்னாப்பிரிக்காவில் தமிழர் பட்ட துயரத்தைக் கண்டு தானே அவர்களுக்காகப் பாடுபட முன் வந்தார்? அதுபோல் தமிழ்த் தலைவர்களில் (வேறு மாநிலத்) தமிழர் அல்லாதவர்களுக்காகப் பாடுபட்டிருக்கிறார்களா?

அடுத்து, திருமணம் ஆனவர்களுக்கு ஈக (தியாக) உணர்வும் ஊக்கமும் குறைந்து விடுகின்றன என்றும், மனைவி மக்கள் தொல்லையிலிருந்து விடுபட முடியவில்லை என்றும் கூறியது முற்றிலும் உண்மைதான்! ஆனால் அத்தகைய ஈகம் (தியாகம்) செய்து துறவி போல் வாழ்ந்தால்தான் பெரும் இயக்கங்களை உருவாக்க முடியும். உலகம் முழுவதும் கிறித்தவ சமயம் பரவியதற்குக் காரணம் எண்ணற்ற இளைஞர்களும், இளைஞைகளும் மாணி(பிரம்மச்சாரி) களாகவும் கன்னிமாராகவும் சமயத்துக்காக வாழ்வை ஈகம் (தியாகம்) செய்ததுதானே? ஆர். எசு. எசு. என்னும் இந்து மத வெறியைப் பரப்பும் ஓர் இயக்கம் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள்! நடுவண் அரசு பன்முறை தடைசெய்தும் கூட நாடெங்கும் அது மிகவும் வளர்ந்து பரவுதற்குக் காரணம் பலர் (தமிழ்நாட்டில் மட்டும் அறுபதின்மர்) திருமணம் புரியாமல் இயக்கம் வளர்வதற்கே ஈகம் (தியாகம்) புரிகிறார்கள்.

அடுத்து, நீங்கள் விரும்பிய பணிகளை முடிக்க பல பிறவிகள் தேவைப்படும் என்று கூறுவது இந்து மதக்கோட்பாடு அல்லவா? உண்மையில் இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடு நல்வினை தீவினைக் கேற்பப் பல பிறவிகளை உயிர் எடுக்கிறது என்பதே திருக் குறளிலும் இயம்பப்படுகிறது. பிற்காலத்தில் பார்ப்பனர் வடமொழி மூலம் தம் மேலாண்மையை நிலை நாட்டினரே அன்றி அடிப்படையில்

www.thamizham.net - Free E book No 7517

வடமொழியும் தென்மொழியும் கருத்தில் ஒன்றானவையே! தொல்காப்பியத்திலும் வடமொழியைத் தனியே குறித்தாலும் அதைப் பகைமொழியாகக் கருதவில்லை.ஆனால் இன்று வடமொழியைப் பகையாகக் கருதினாலும் அதேபோல் மற்ற மொழிகள், தமிழை அழிக்க முயல்வதையும் கண்டிக்கலாம் அல்லவா? இந்துமத மாற்றங்களால் தாழ்த்தப்பட்டோர் எல்லாம் தமிழ்ப்பெயர்களை விடுத்து உருதுவிலும் அராபிய மொழியிலும் பெயர் வைத்துக்கொண்டு, அராபிய மொழியில் வழிபாடு செய்து தமிழ்ப் பண்பாட்டையே புதைகுழியிலிடுவதை ஏன் நீங்களோ உலகத்தமிழ் மாநாட்டுப் படிநிகராளியர்(பிரதிநிதிகள்) எவருமோ கண்டிக்க முன்வரவில்லை என்பதுதான் புரியாத புதிராயிருக்கிறது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் பல்லோரையும் மதமாற்றி (வடாற்காடு மாவட்டத்தில்).ரஷிதாபாத், விஷாரம், முர்ஷிதாபாத், நாசரேத் கடைசியாக (நெல்லை மாவட்டம்) ரஹ்மத் நகர் (மீனாட்சிபுரம்)-இப்படி நாடே பாகித்தானாகப் போவதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறீர்களா? இன்று இந்த விலங்காண்டித்தனத்தை எதிர்க்காவிட்டாலும் என்றாவது ஒரு நாள் நீங்கள் எதிர்க்க முன்வராவிட்டால் உ. த. மு. க. வலிமை இழப்பது உறுதி!-வணக்கம்.

— வயிரவன், சென்னை-17.

0:888. பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம். இரு மாதங்களாக எதிர்பார்த்த மாநாட்டுச் சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். நடைபெற்ற நிகழ்ச்சிகள் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். வர இயலாமற் போனமைக்கு வருந்தினேன். மற்று, திருவாட்டி குமுதம் மகிழ்நன் அவர்களின் எதிர்பாரா மறைவு கண்டு மிக வருந்தினேன். வணக்கத் திற்குரிய அன்புடைய அவ்வம்மையார் சில ஆண்டுகளுக்குள் மறைவுற்றது என்னையும் மிக வருத்துகின்றது. திரு நாரா. மகிழ்நன் ஐயா அவர்களுக்கு என் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். (முகவரி தெரியாமல் அவர்க்கு எழுதவில்லை). தமிழ்ச்சிட்டில் பேராசிரியர் சக்திப்புயல் அவர்களின் உயிரோவியம் மகிழ்விலும் வியப்பிலும் ஆழ்த்தியது. பிறரையும் மகிழ்வித்தேன். ஆனாலும் எனக்கொரு குறை. நான்ககவைச் சிறுமிக்கு "இந்தக் கழுதைக் கெல்லாம் வெட்கம் இருக்கிறதா?" என்று நினைக்கும் அளவுக்கு (இன்னும் சிலவும்) அறிவு வளர்ச்சி உண்டா என்று எண்ணத்தோன்றுகின்றது.
தங்களன்புள்ள, —த. அன்பழகன். மஞ்சள்நீர்க்காயல்.

0.889: செந்தமிழ்வானில் செவ்வொளிகாலுஞ் செஞ்சுடர்க் கனலியே,பணிவான வணக்கம்; வாழ்க பல்லாண்டு. உ. த. மு. க. மாநாட்டுச் சிறப்பிதழ் பெற்றேன். மகிழ்வுற்றேன். நன்றியுடையேன். எளியேன் மாநாட்டிற்குப் போந்து, ஏந்தெழிலார்ந்த பூந்தமிழெழுச்சியுரைகளை மாந்திப் பயனுறப் பெரிதும் விழைந்தேன்; முயன்றேன். இயன்றிலது.வாழ்க்கைச் சிக்கல்களின்கரணியமாக மனநலனும்உடல் நலனும் குன்றவே எளியேன் மாநாட்டிற்கு வரவியலாது போயிற்று.

எளியேனது வாழ்க்கைச் செலவில் எத்தனையோ ஏதங்கள் எதிர்ப்படுகின்றன.என்றாலும்,குன்றென நிமிர்ந்து நின்று ஒல்லாங்கு நன்றாற்றும் வல்லமை தந்துவருவது, எளியேனது மனவானில்

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம் பார்க்க.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை–600 005(தமிழகம்).

www.thamizham.net - Free E book No 7517